# சபைக்காக அக்கறை கொள்ளுதல் (1 தீமோத்தேயு 3)

*"... தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1 தீமோ. 3:15).*

தேவனுடைய திட்டங்களும் அளிப்புகளும் தனிநபர்களுக்கு மட்டுமானவைகளாயிருப்பதில்லை, ஆனால் அவைகள் சரீரம் என்ற வகையில் சபைக்கும் உரியவைகளாய் உள்ளன. தகுதியுடைய மூப்பர்கள் *(3:1-7)* மற்றும் உதவிக்காரர்கள் *(3:8-13)* ஆகியோரால் தேவனுடைய சபையின் பராமரிப்புக்கான அவருடைய திட்டம் குறித்துப் பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினார். மேலும் அவர், சபையில் நடக்க வேண்டிய வகை *(3:14, 15)* மற்றும் இரட்சிப்பின் மீது கிறிஸ்தவரின் நம்பிக்கை *(3:16)* ஆகியவற்றிற்கான தேவனுடைய திட்டத்தையும் முன் வைத்தார்.

## பாடம் *7:* சபைக்கான அக்கறை - கண்காணிகள் *(3:1-7)*

இன்றைய நாட்களில் பல சபைகள் தங்களை, கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய வகையில் பலமும் தேவனுடைய மந்தையைக் கவனிப்பதற்குப் போதிய அளவு நிலைப்புத் தன்மையும் உள்ள விசுவாசம் நிறைந்த மனிதர்களுக்குப் பஞ்சம் உள்ளவைகளாகக் காண்கின்றன. மிக அதிகமான கிறிஸ்தவ ஆண்கள், தாங்கள் ஒருக்காலும் கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தில் மூப்பர்களாக முடியாது என்று நம்பிக் கொண்டுள்ளனர். *மனிதர்கள் இவ்வகையில் சிந்திப்பதற்குக் கர்த்தர் நோக்கம் கொண்டிருந்தாரா?*

தொடர்ந்து வளரும் சீஷர்களை மேம்படுத்தும் ஆவியின் மறுபிறப்பானது சபைக்கு மிக மிக அவசியப்படுகிறது. பின்பு, எந்த ஒரு

சபையின் வரலாற்றிலும் காலத்தின் ஒரு குறுகிய அளவுக்குப் பிறகு, பக்குவமடைந்த மனிதர்கள் கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, கேள்வியோ அல்லது பூசலோ, சந்தேகமோ அல்லது பயமோ இன்றி, மூப்பர்களாக நியமிக்கப்பட முடியும் (அப். 6:1-6; 11:29, 30; 14:21-23ஐக் காணவும்).[1]

மூப்பர்களுக்கான தகுதிகள் என்பவை "சாத்தியமற்ற" நியதிகளாக இருப்பதில்லை. இந்த அதிகாரப் பகுதியையும் மற்றும் தீத்து 1:6-9 வசனப் பகுதியையும் உறுப்பினர்களாய் உள்ள மனிதர்களில் பலர் காணாது விடக் கூடிய அளவுக்கு அவைகள் (தகுதிகள்) ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவுக்கு மாத்திரமானவைகளாய் இருப்பதில்லை. ஒரு கிறிஸ்தவர், தாம் பக்குவமடைவதை நிறுத்திக் கொள்ள முடியும் மற்றும் "ஒரு சராசரிக் கிறிஸ்தவராக" அமைந்து நின்று கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது. எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவைப் போலிருக்கும் அதே அடிப்படைத் தகுதிகளை வளர்த்துக் கொள்வதும், தக்க விதத்தில் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதும் அவசியம். மூப்பர்கள் என்பவர்கள் "மிகவும் மேலான பரிசுத்தவான்களாய்" இருக்க வேண்டும் என்று மிகவும் பலர் நினைக்கையில், சகோதரர்களில் எஞ்சியுள்ளவர்கள் மிகவும் அரிதாகவே (வேதாகமத்தைப்) படிக்கத் தாராளமாகவும், மாறுபாடான கருத்துக்களில் மட்டுமே வளருகின்றவர்களாகவும், மற்றும் தங்கள் வீணான மதியீனத்தில் மனம்போன போக்கில் போகிறவர்களாகவும் உள்ளனர்! அந்த வகையான வெளிக் கண்ணோக்கானது நமது சிந்தையை எந்த (குறைந்த) அளவுக்கு ஆளுகை செய்தாலும், அது சபையின் மீது நாம் நியமனம் செய்ய மனிதர்கள் நம்மிடையே தேடுகையில் நாம் அனுபவிக்கும் இடர்ப்பாட்டில் ஒரு முக்கிய/பிரதான காரணியாகவே உள்ளது.

## எடுத்துரைக்கப்பட்ட நிலைப்பாடு (வ. 1)

*மூப்பர் என்பவர் யார்?* அவர் அடிப்படையில், தமது வியாபார, சமூக, குடிமை, வீடு மற்றும் ஆவிக்குரிய முயற்சிகளில் கிறிஸ்துவின் இயல்பை வளரச் செய்துள்ள ஒரு கிறிஸ்தவராயிருக்கிறார். பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு(ம் கூட) ஒரு சபையானது தன்னிடையே இம்மனிதர்களைக் கண்டறியக் கூடாத நிலையில் இருந்தால், "ஒருங்கமைத்தல்" என்பதைக் காட்டிலும் பெரிதான பிரச்சனை நிலவுகிறது. அப்படிப்பட்ட ஒரு சபையானது "கிறிஸ்தவப் படுத்தப்படுதலின்" அவசியத்தை உணர்வது தேவையாக உள்ளது!

"நீங்கள் கொண்டுள்ளவர்களில் சிறந்தவர்களைப் பொறுக்கி யெடுங்கள்" என்பது போன்ற எண்ணப்போக்கு எதுவும் பயன் தராது. "நியமிக்கப்பட்ட மனிதர்கள் யாவரும் ஒன்றுகூடி இத்தகுதிகளைக் கொண்டுள்ளனர்" என்று கூறுவதானது ஏவுதல் பெற்ற நிபந்தனைகளை நிறைவடையச் செய்யாது. ஒரு முனையானது "தகுதிகள் அடைய முடியாத வையாய் உள்ளன" என்று கதறிக் கொண்டிருக்கையில், எதிர் முனையானது தர அளவையை, "நாம் கொண்டுள்ளவர்களில் மிகச் சிறந்தவர்கள்" என்ற

அளவுக்குக் கீழே இழுத்து அது போதுமானது என்று நினைக்கிறது. இந்த (இரு) முனைகளுக்குமிடையில், மூப்பரின் நல் ஊழியத்தை செய்ய விரும்பும் எந்த மனிதருக்குமான ஏவுதல் பெற்ற நிபந்தனைகள் நிலை நிற்கின்றன. கர்த்தருடைய சபையில் இந்த வலிவு மிக்க பணிக்கு விருப்பமும் தகுதியும் கொண்ட அதிகமான மனிதர்கள் நமக்குத் தேவை.

ஆவிக்குரிய வகையில் முதிர்வடைந்த மனிதர்கள், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய் இருப்பவர்கள் பக்குவமடைய உதவ வேண்டும். இது சபைக்கான தெய்வீக வடிவமைப்பின் ஒரு அங்கமாக உள்ளது (3:15; 1 பேது. 1:22-2:2; 2 கொரி. 5:17-21ஐக் காணவும்). இந்தப் பணியானது இதைச் செய்பவர்களுக்குத் திட்டவட்டமான நிபந்தனைகளை விதிக்கின்ற தெளிவு நிறைந்த ஊழியமாக உள்ளது.

## பாலினம்

"கண்காணிப்பை விரும்புகிறவன்" என்று பவுல் எழுதினார் (3:1). இது, பெண் மூப்பர்களைக் கொண்டுள்ள சில மதக்குழுக்களின் நடைமுறையைத் தீர்த்து வைக்கிறது. இது, ஒரு அதிகாரம் பிரித்து கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாக உள்ளது. 1 தீமோத்தேயு 2:15க்குப் பிறகு பெண்களைப் பற்றிப் பேசுவதை நிறுத்திய பவுல், 1 தீமோத்தேயு 3:1ல் ஆண்களைப் பற்றிப் பேசத் தொடங்கினார். "man" என்று ஆங்கில வேதாகமத்தில் வரும் வார்த்தையானது கிரேக்க நூலில் இல்லையென்றாலும், பின்வரும் இரண்டு காரணங்களுக்காகப் பவுல் ஆண்களையே இவ்விடத்தில் குறிப்பிட்டார் என்பது தெளிவாகின்றது: (1) "கண்காணி" (Gk.: *episkopon*) என்பது ஆண்பால், (episkopos) திட்டமான ஒருமைச் சொல்லாக உள்ளது, மற்றும் (2) கிறிஸ்துவின் திட்ட அளவையின் கீழ், ஒரு பெண் "ஒரே மனைவியை உடைய புருஷனாக" (வ. 2) இருத்தல் என்பது என்றென்றைக்கும் சாத்தியமற்றதாகவே இருக்கும்.

## ஆவி

பவுல், "கண்காணிப்பை விரும்புகிறவன் எவனும்"[2] என்று கூறினார். நாடும் இந்த ஆவியானது, இந்த ஊழியத்தைச் செய்யக் கூடியவராயிருந்து ஆனால் "நான் ஒரு கண்காணியாய் இருக்க விரும்பவில்லை என்று தீர்க்கமாய்க் கூறும் மனிதரின் விஷயத்தில் தீர்மானம் செய்து வைப்பதாயிருக்கிறது. பின்வரும் தகுதிகளில் ஏதொன்றும் கூட விருப்பம் அல்லது ஆர்வம் காட்டக் கூடியதாயிருப்பதில்லை. இது ஏன் என்று விளக்குகிறது. தேவைப்பட்ட பண்பு மற்றும் வீட்டிற்குரிய தகுதிகளைப் பற்றிப் பவுல் விவரிப்பதற்கு முன்னர், அவர் அவசியமான அணுகுமுறையை அடையாளப்படுத்தினார். பிற்பாடு, மூப்பர்கள் "கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாய்" (1 பேது. 5:2) மேய்க்க வேண்டும் என்று பேதுரு எழுதிய பொழுது அவரும் இதே விதமான கருத்தையே எடுத்துரைத்தார். நியமிக்கப்பட்டு, ஆனால் மனவிருப்பமின்றி ஊழியம் செய்யும் ஒருவர் கர்த்தருடைய மக்களின் வளர்ச்சிக்குத் தடங்கலாக இருக்கிறார்.

*ஆளுகை செய்ய மட்டுமே விரும்பிய தியோத்திரேப்பு (3 யோவா. 9-11) போன்ற சில சகோதரருக்கு கதவைத் திறப்பதும், அல்லது பதவியை ஏக்கத்தோடு நாடும் யாக்கோபும் யோவானும் போன்று (மாற். 10:35-37) செயல்படும் அபாயம் பற்றிச் சிலர் ஏற்கத்தக்க கவலைகள் கொண்டுள்ளனர். வசனம் 1ன் அடுத்த சொற்றொடரில் பவுல் இந்த பிரச்சனையைத் தீர்த்து வைத்தார்.*

## பொறுப்பு

"If any man aspires *to the office of overseer" (3:1)*[3] *என்ற பவுலின் கூற்றில் உள்ள கிரேக்கக் கட்டமைவை நாம் கவனிப்போம்.* "Office" *என்ற வார்த்தை கிரேக்க வசனத்தில் இல்லை. கிரேக்க மொழியிலிருந்து நேரடியான தரவழைப்பானது,* "If anyone Oversight aspires to, a good work he desires" *என்பதாக இருக்கும். இது ஒரு கனம்/மதிப்பு என்பதை விட தெளிவான பொறுப்பு என்பதே அதிகம் ஏற்புடையதாக உள்ளது. இது ஒரு பணியே தவிர அலுவலகம் அல்ல/பதவியல்ல! இம்மாபெரும் பணிக்கான பவுலின் வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் "மூப்பர்," "பாஸ்ட்டர்," மற்றும் "மேய்ப்பர்" (அப். 20:17, 28; எபே. 4:11; தீத்து 1:5, 7; 1 பேது. 5:1-3), அத்துடன்* KJV*யில் "ஆயர்" (தீத்து 1:7) ஆகிய வார்த்தைகளுடன் இணை மாற்றக்கூடியதாக உள்ளது. இச்சொற்றொடர்களின் உறவுமுறைகள் பின்வரும் வகையில் காணப்படக் கூடும்:*

| | |
|---|---|
| *கண்காணி அல்லது ஆயர்* | *பொறுப்பு மற்றும் அதிகாரம்* |
| *மூப்பர் அல்லது பிரிஸ்பைட்டர்* | *வயது மற்றும் பக்குவம்* |
| *பாஸ்ட்டர் அல்லது மேய்ப்பர்* | *ஊழியம் மற்றும் ஆவி* |

## ***ஊழியம்***

*"இது கண்காணி செய்ய விரும்புகிற*[4] *ஒரு நேர்த்தியான ஊழியம்" என்று பவுல் உரைத்தார். "விரும்புகிறான்" என்ற வார்த்தையானது "வேலை" என்ற வார்த்தையுடன் இணைக்கப்படும் பொழுது, "பதவியை நாடுகிறவர்கள்" யாவரையும் நீக்கிப் போடுகிறது; மற்றும் "நல்ல" என்ற வார்த்தையானது மூப்பரின் ஊழியத்துடன் இணைவிக்கப்படும் பொழுது ஆளுகை செய்யும் ஆவியை நீக்கிப் போடுகிறது. ஆகையால், இந்தச் சொற்றொடரானது ("கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்" என்ற சொற்றொடரானது) இராஜ்யம் வளருவதில் பேரார்வம் கொண்டுள்ள ஒரு சகோதரரின் இருதயமானது இரட்சகருக்கான ஊழியத்தில் பிரயாசப் படுவதை நோக்கி அமைந்திருக்குமளவுடையதாக இருக்கிறது. இந்த எண்ணப்போக்கானது பின்வரும் தகுதிகளுடன் இணையும் பொழுது, விளைவுகள் எப்பொழுதுமே தேவனுக்கென்று மாபெரும் ஊழியர் உருவாகுதல் என்பதாகவே இருக்கும்.*

## *அட்டவணைப் படுத்தப்பட்ட தகுதிகள்*

## *(வ. 2-7)*

*கண்காணிகளுக்கான இந்தத் தகுதிகளை அணுகுவதில் நாம் முன்னெச்சரிக்கையைச் செயல்படுத்த வேண்டும். கள்ள போதனைகள், முன் அனுமானக் கருத்துக்கள், மற்றும் மனிதரால் வடிவமைக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் போன்றவை பரிசுத்த ஆவியானவரின் விவரக் குறிப்பு களை மிகவும் அடிக்கடி தாழ்வாகக் கருதியுள்ளன. இப்பகுதியில்தான் நாம் எழுதப்பட்டவைகளுடன் ஒன்றைக் கூட்டாமலும் அல்லது அவற்றிலிருந்து ஒன்றை எடுத்துப் போடாமலும் இருப்பதில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்!*

*பவுல் "கண்காணிப்பை" என்று குறிப்பிட்ட பொழுது திட்டவட்ட மானவராயிருந்தார். பவுல் தனிநபர்களின் குழுவைப் பற்றி அல்ல ஆனால் ஒரு தனிநபரைப் பற்றியே எழுதினார். (கண்காணியாகும்) ஒவ்வொரு மனிதரும் பவுல் அட்டவணைப் படுத்திய தகுதிகளை கொண்டிருக்க வேண்டும். மேலும், இந்தக் கண்காணி என்பவர் பவுல் விவரித்துள்ள வகையான மனிதராய் "இருக்க வேண்டும்"[5] என்று அவர் கூறினார். கண்காணி என்பவர் இந்தத் தகுதிகளை/பண்புகளை அடைய வேண்டும் என்று மட்டுமின்றி, இவைகளைக் கொண்டிருக்க வேண்டியது அல்லது இவைகளைக் கொண்டிருக்கும்படி கட்டுப்பட வேண்டியது அவசியம் என்று அவர் கட்டளையிட்டார். அது அவர் செய்ய வேண்டிய கடமை யாக(வும்) இருந்தது.*

*இருப்பினும், நாம், இவற்றில் சில ("சாந்த குணம்" மற்றும் "உபசரிக்கும் தன்மை" போன்றவை) அளவீட்டிலான தகுதிகளாய் உள்ளன என்பதை உணர்ந்தறிய வேண்டும். சகோதரர்கள் இந்தத் தகுதிகளை மிகச் சரியாக ஒரே அளவுக்குக் கொண்டிருக்க மாட்டார்கள். தகுதியுள்ள சகோதரர் இந்தப் பண்புகளைத் தமது வாழ்வில் பிறர் கண்டறியத் தக்க அளவுக்குக் கொண்டிருக்க வேண்டும் என்பதே நாம் உணர்ந்தறிய வேண்டியதாக உள்ளது. ஒரு மனிதர் சாந்தமாய் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி கொடுமையானவராக, உணர்வடக்கமுள்ளவராய் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி உணர்வடக்கம் அற்றவராக, மதிக்க தக்கவராய் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி மதிப்பற்றவராக இருப்பதாக அறியப்பட்டிருந்தால், அளவீடுகளில் அவர் தம்மைத் தாமே தகுதியற்றவராக்கிக் கொள்ளுகிறார்!*

*இவ்விடத்தில் இரண்டு உற்று நோக்கல்கள் ஏற்படுத்தப்பட முடியும். முதலாவது, பவுல் பயன்படுத்திய ஒவ்வொரு சொல்லையும் அல்லது சொற்றொடரையும் நாம் விளக்க வேண்டியுள்ளது. இரண்டாவது, மூப்பர்களிடத்தில் கேட்டுக் கொள்ளப்படுகிறவைகளுக்கும், சபையின் எந்த ஒரு உறுப்பினரும் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கும் இடையில் ஒரு தெளிவான இணைவை நாம் காண வேண்டியது அவசியம்! இந்த இரு உற்று நோக்கல்களிலும் உதவுவதற்கு "மூப்பர்களின் தகுதிகள்" என்ற அட்ட வணையைக் காணவும். பின்வரும் நான்கு மொழிபெயர்ப்புகளிலும்*

மாறுபட்ட வார்த்தை அமைப்புகளில் இது அட்டவணையிடப்பட்டுள்ளது: New American Standard, King James Version, American Standard மற்றும் The New International Version. இது எந்த ஒரு மொழிபெயர்ப்பையும் அங்கீகரிப் பதற்கானதோ அல்லது அங்கீகரியாதிருப்பதற்கானதோ அல்ல, ஆனால் இருக்கின்ற மாறுபாடுகளை ஒப்பிடுவதற்கானதேயாகும்.

வாழ்வின் இந்தப் பகுதிகளில் ஒரு மூப்பர் கொண்டிருக்கும் அதே தகுதிகளை சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் கொண்டிருக்க வேண்டிய வராய் இருக்கிறார். இயல்பாகவே, ஒரு பெண், மனைவியைக் கொண்டிருக் கும்படி கேட்டுக்கொள்ளப்படுவதில்லை, அது போலவே திருமண மாகாதவர் பரலோகம் செல்ல நம்பிக்கை கொள்ள வேண்டுமென்றால் அவர் ஒரு மனைவியைக் கொண்டிருக்க வேண்டும் என்று கிறிஸ்து வற்புறுத்துவ தில்லை. இருப்பினும், திருமணமாகாத ஒருவர் திருமணம் முடிக்க முடிவு செய்தால், அவர் ஒரே ஒரு மனைவிக்கு கணவராக வேண்டும், இது ஒரு மூப்பரிடத்தில் கேட்டுக் கொள்ளப்படுவது போலவே உள்ளது (1 கொரி. 7:1, 2; மத். 19:5, 6). பிள்ளைகளைக் கொண்டிருக்க விரும்பும் திருமணமான எந்தத் தம்பதியும் அந்தப் பிள்ளைகள் நம்பி, விசுவாசமுள்ளவர்களாயிருந்து, துன்மார்க்க அல்லது அடங்காமை என்ற குற்றம் சாட்டப்படாதவர்களாய் இருக்கும்படி பயிற்றுவிக்கவும் அவர்களைப் போஷிக்கவும் வேண்டும் (தீத்து 1:6; எபே. 6:1-4). மேலும், ஒரு கிறிஸ்தவர் நூதன சீஷனாகவே (புதிதாக மனம்மாறிய சீஷனாகவே) நிலைத்திருக்க மாட்டார் (எபி. 5:11-14; 1 பேது. 3:15; 2:2).

இந்தச் சொற்கள் மற்றும் சொற்றொடர்களின் விளக்கங்களையும் மொழிபெயர்ப்புக்களையும் ஒன்றுகூட்டி இணைப்பதினால், மூப்பர்களின் தகுதிகளைப் பற்றிய ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதலை நாம் பெற முடியும்.

## எதிர்மறை

“குற்றம் சாட்டப்படாதவர்.”[6] அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவுமே கூட கலகத்திற்குக் காரணமாயிருந்ததாகக் (குற்றம் சாட்டப்பட்டதை) எதிர் கொண்ட போதிலும் (மத். 12:2, 24; 15:2; லூக். 13:14; அப். 17:6; 24:5), அவர்கள் தவறு எதுவும் செய்ததாக எவரொருவரும் உண்மையாகக் குற்றம் சாட்ட முடியாதிருந்தது. அது போலவே மூப்பரும் கூட, தவறு செய்தார் என்று தமக்கெதிராக எந்த குற்றச் சாட்டும் கூற முடியாதவாறு வாழ்கின்ற மனிதராக இருக்க வேண்டும்.

“மதுபானத்திற்கு அடிமையாகாதவர்.”[7] இவ்விடத்தில் குடிப்பழக்கம் மட்டும் தடை செய்யப்படுவதில்லை. அப்படியிருந்ததென்றால், அந்தக் கருத்தை விளக்கும் சொல் ஒன்றை நாம் பெற்றிருப்போம் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. மேலும், “அதிகம்” என்ற வார்த்தை மூலப் பிரதியில் இல்லை. கிரேக்கச் சொற்றொடரானது “மதுபானப் பிரியன்” என்று அர்த்தப்படுகிறது. இது அவர் ஒருக்காலும் போதையுள்ளவராய்/ போதைக்கு அடிமையானவராய்[8] ஆகாதிருப்பார் என்றாலும் மிகவும்

*தெளிவான மக்களிடையே வழக்கமாய் இருப்பதைக் காட்டிலும் மதுபானத்தைத் தாராளமாய்ப் பயன்படுத்துவதைச் சுட்டிக் காண்பிக்கிறது.*

*"அடியாதவர்."[9] அடிக்கின்ற நபர் என்பவர் நேரடி அர்த்தத்தில், "கையினால் அடிப்பவராக" உள்ளார். அவர் இடர்ப்பாட்டு வேளைகளில் சுயகட்டுப்பாடு கொண்டிருக்காத ஒரு மனிதர்.*

*"சண்டை பண்ணாதவர்"[10] மூப்பர் என்பவர் "போராட்டம் செய்வதில் விருப்பம்" அற்றவராய் அல்லது விரோதம் மற்றும் முரண்பாட்டினால் பண்புபடுத்தப்படுபவராய் இருக்கலாகாது.[11] அப்படிப்பட்ட ஒரு நபர் "பயனற்றவைகளாய் உள்ள வார்த்தைகளைக் கொண்டு சச்சரவு" செய்வார் (2 தீமோ. 2:14). அந்த (வகையான) ஆவியை மூப்பர்கள் நிச்சயமாகவே தவிர்க்க வேண்டும்.[12]*

*"பண ஆசை இல்லாதவர்"[13] தீத்து 1:7ல் பவுல், "இழிவான ஆதாயத்தை இச்சியாதிருத்தல்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். இவ்வகையான நபர், நேர்மையற்ற ஆதாயத்திற்கு உள்ளான பசி/வேட்கை உடையவராயிருக்கின்றார் (1 தீமோ. 6:9). இது கர்த்தருடைய பணத்தை அவரது கரங்களில் தருவதை, இடர்ப்பாட்டை வரவேற்கும் செயலாக்கி விடும். யூதாஸ் காரியோத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள் (யோவா. 12:4-6).*

*"நூதன சீஷனாயிருக்கக் கூடாது."[14] புதிய கிறிஸ்தவரொருவர், மூப்பராய் இருப்பதை மிக இன்றியமையாத பொறுப்பு என்பதற்கு மாறாக கௌரவம் தரும் உத்தியோகம் என்ற வகையில் கண்ணோக்கமிடலாம். தேவனால் ஏவுதல் பெற்ற செய்தியாளர் என்ற வகையில் பவுல், கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருப்பவர் மூப்பரானால், அவர் தம் மேட்டிமையின் காரணத்தினால் இறுமாப்படைந்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படக் கூடிய வகையில் விழுந்து போகக் கூடும் என்பதை அறிந்திருந்தார். அத்துடன் கூடுதலாக, புதிதாய் மனம்மாறியிருப்பவர், மந்தைக்குப் போதித்து, அதை மேய்க்க வேண்டிய வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய ஞானமோ கொண்டிருப்பதில்லை.*

*"தன் இஷ்டப்படி செய்யாதவர்"[15] (தீத்து 1:7). தன் விருப்பப்படி செய்கின்ற மனிதர் ஞானமுள்ள, அதிகம் புரிந்து கொள்ளுதல் உள்ள சகோதரர்களின் விருப்பங்களைப் பொருட்படுத்தாது தமது வழிமுறைகளையே அதிகமாக வற்புறுத்துகின்றவராயிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு நபர் நல்ல கருத்துக்களை இக்கட்டுக்குள்ளாக்குபவராகவோ அல்லது சர்வாதிகாரி போல ஆதிக்கம் செலுத்துபவராகவோ இருந்து கொண்டு, ஆவிக்குரிய மேம்பாட்டிற்காக கிறிஸ்து விடுதலை செய்துள்ள ஆத்துமாக்களை அடிமைப்படுத்துபவராயிருப்பார்.*

*"முற்கோபமில்லாதவர்"[16] (தீத்து 1:7). சுலபமாய்க் கோபம் கொள்ளுகின்ற முரட்டுத்தனமான, கட்டுக்கடங்காத ஒரு மனிதர் சாந்தமாய் முடிவெடுக்க சுலபமாய் முடியாதவராய் உள்ளார். அவர் கடினமான பிரச்சனைகளையும் சபையில் இறுக்கமுண்டாக்கும் சூழ்நிலைகளையும் பொறுமையான அமைதியுடன் கையாள முடியாது.*

*"ஒரே மனைவியை உடைய புருஷன்."*[17] இந்தத் தகுதியானது முதலில் சுய விளக்கமுடையதாக ஒலிக்கையில், இது அதிகமாய் கலந்துரை யாடுதலின் கவனம் பெற்றதாய் உள்ளது. J. W. மெக்கார்வி அவர்கள் பின்வரும் தொகுப்புரையை அளித்தார்:

> *''ஒரே மனைவியை உடைய புருஷன்'' என்ற சொல் விளக்கம் மாறுபட்ட மூன்று வழிகளில் பொருள் கொள்ளப்படுகிறது: (1) முதல் மனைவி இறந்திருக்கையில், இரண்டாம் மனைவியுடன் வாழ்கின்ற ஒரு மனிதரைத் தவிர்த்தல்; (2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனைவிகளை உடைய மனிதரை மட்டும் தவிர்த்தல்; (3) இந்தப் பிந்தியவரைத் தவிர்ப்பது போலவே மனைவி இல்லாதவரையும் தவிர்த்தல். "மனைவி" என்ற வார்த்தையுடன் இணைந்துள்ள "ஒரே" என்ற எண்ணிக்கையானது ஒன்றுக்கு மேற்பட்டதை உறுதியாகவே நீக்கம் செய்கிறது; இதைப் பற்றி வேறுபாடு எதுவும் இல்லை. இறந்து போன மனைவிக்கு இனியும் அவர் கணவராய் இராதபடியினால் அவர் ஒரே ஒரு மனைவிக்குக் கணவராய் இருக்கிறார் என்று நான் நம்ப முடியவில்லை. இது மனைவியற்ற மனிதரைத் தவிர்க்கிறதா? இது அவ்வாறு செய்கிறது என்றே எனக்கு மிகத் தெளிவாகக் காணப் படுகிறது. ஒரு கண், ஒரு கை, ஒரு கால் கொண்ட ஒரு மனிதர் கண்ணற்ற, கையற்ற, காலற்ற மனிதராக இருப்பதில்லை! அவர் ஒரு நண்பர், ஒரு வீடு, ஒரு பண்ணை, கொண்ட மனிதராய் இருப்பா ரென்றால், உறுதியாகவே அவர் ஒரு நண்பரற்ற, வீடற்ற, பண்ணை யற்ற மனிதராயிருக்க மாட்டார். அது போலவே, அவர் ஒரே மனைவியை உடைய புருஷனாயிருந்தால், மனைவியற்ற புருஷனாய் இருக்க மாட்டார்.*[18]

திருமணம், மணமுறிவு மற்றும் மறுமணம் என்ற சூழ்நிலையில் ஒருவர், நான்காவது நிபந்தனை ஒன்றையும் எதிர்கொள்ள நேரிடலாம். வலிவார்ந்த கேள்வி பின்வருமாறு: "அது மறுமணம் செய்ய உரிமையை அளிக்கும் வேதாகம ரீதியான மணமுறிவாக உள்ளதா?" அப்படியிருந்தால், அவர் "ஒரே மனைவியை உடைய புருஷனாக" இருக்கின்றார். விவாக ரத்து/ மணமுறிவு எப்பொழுது ஏற்பட்டது? அது கண்காணிப்பில் அவருடைய ஊழியத்தைப் பாதிக்குமா? இப்படிப்பட்ட கேள்விகளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.[19]

*"ஜாக்கிரதையுள்ளவர்"*[20] தேவனுக்கு முதலிடம் கொடுக்கின்ற ஒரு மனிதர், தம்மைப் பற்றி நினைப்பதற்கு முன்பு மற்றவர்களைப் பற்றி நினைக்க வேண்டும். ரோமர் 14:21ஐ சிந்தித்துப் பாருங்கள்.

*''தெளிந்த புத்தியுள்ளவர்''*[21] மூப்பர்கள் தங்களை சிறுபிள்ளைத் தனமான விஷயங்களுக்கு ஒப்புக் கொடுத்து விடுபவர்களாய் இருக்கக் கூடாது (1 கொரி. 13:11; 14:20). இது தகுதியற்ற/ஏற்புடையதல்லாத நகைச்சுவை அல்லது சிரிப்புத் துணுக்கையும் உள்ளடக்குகிறது. இதே கிரேக்க வார்த்தையே தீத்து 1:8ல் "Sensible" (தமிழில் ''தெளிந்த புத்தியுள்ளவர்" என்றே உள்ளது) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

"யோக்கியதையுள்ளவர்"[22] (ஒழுங்குள்ளவர்; ASV). தனது வாழ்விலும் வியாபாரத்திலும் ஒழுங்கின்மை உடைய ஒரு மனிதர், சபையானது அதன் நடக்கையில் ஒழுங்கின்மையுடையதாய் ஆகும்படி அனுமதித்து விடுவார். இது, விலகிப் போன ஆடுகளைத் தேடிக் கண்டு பிடித்தல், உறுப்பினர்களின் பொறுப்பற்ற நடக்கையைக் கண்டித்து ஒழுங்குபடுத்துதல், உறுப்பினர்களுக்கிடையில் உள்ள மனத்தாங்கல்களை ஒப்புரவாக்குதல், அல்லது சகோதரர்கள் மத்தியில் மாபெரும் வலிவை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தோல்வியை விளைவிக்கக் கூடும். பொருளாதாய விஷயங்களில் பதிவேடுகள் சரிவரப் பராமரிக்கப்படாமலும், அஞ்சல்கள் புறக்கணிக்கப் பட்டும் இருக்கும். சபை வளர்ச்சியைப் பற்றிக் கற்றறிதல் சாத்தியமற்றதாயிருக்கும், மற்றும் பாடத் திட்டமானது சபையின் தேவைகளை ஒருக்காலும் சந்திக்காது. நிதிநிலை சார்ந்த வகையில், பற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்தப்படாத நிலுவையிலும் நிற்கும்; கொடுப்பதற்கான சாத்தியக் கூறு ஒருக்காலும் ஆய்ந்தறியப்படாது, சகோதரர்களுக்கு (அதைப் பற்றி) அறைகூவலும் விடப்படாது. ஆராதனையானது பயபக்தியையும் பக்தியுணர்வையும் எழுப்பும்படி வடிவமைக்கப்படுவதற்கு மாறாக மீண்டும் மீண்டும் செய்யப்படும் வழிமுறைகளைப் பின்பற்றுவதாக இருக்கும். சுவிசேஷ ஊழியத்திற்கான கண்ணோக்கானது ஒருக்காலும் மேம்படுத்தப்படாமல், மற்றவர்களைச் சென்றடைவதற்கான திட்டமிட்ட, செயல்விளைவுள்ள வழி எதற்கும் நேரம் காணப்படாமல் இருக்கும். *ஒழுங்குமுறை காணப்படாமற் போகும் பொழுது அதன் விலை என்னவாக உள்ளது!*

"உபசரிக்கிறவர்."[23] போதனையையும் ஆலோசனையையும் நாடுகின்றவர்களுக்கு மூப்பரின் இல்லம் திறந்திருக்க வேண்டும். சபையை மேய்ப்பதற்கு மூப்பர் உறுப்பினர்களை அறியும்படிக்கு அவர்களுடன் நேரம் செலவிட வேண்டும். ஓட்டோ ஃபோஸ்ட்டர் அவர்கள் பின்வரும் உற்று நோக்கலை ஏற்படுத்தினார்:

> மூப்பர் தம் முன்மாதிரியை மற்றவர்கள் பின்பற்றுமளவு அவர்கள் மீது செல்வாக்கைச் செலுத்தக் கூடிய அளவுக்கு இந்தத் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும். உபசரிப்பு என்பது சபையின் ஆராதனை ஊழியத்திற்கு வரும் பார்வையாளர்களிடத்தில் நட்புறவுடன் இருத்தல் என்றும் சபையின் புதிய உறுப்பினர்களிடத்தில் ஒரு ஆர்வத்தை வெளிப்படுத்துதல் என்றும் அர்த்தப்படுகிறது. உபசரிப்பு என்பது பார்வையிட வரும் பிரசங்கியாரை மட்டுமின்றி, பலவீனமாய் உள்ள மற்றும் சபையின் பலமுள்ள உறுப்பினர்களின் தோழமையினால் உற்சாகப்படுத்தப்படக் கூடிய உறுப்பினர்களையும் உங்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுதல் என்று அர்த்தப்படுகிறது. இது கிறிஸ்துவின் சரீரத்தில் உறுப்பினர்களாய் இராதவர்களிடத்திலும் உபசரிப்புத் தன்மையுடன் இருத்தல் என்று அர்த்தப்படுகிறது, அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் கிறிஸ்தவ இல்லங்களின் வனப்பு மற்றும் வியப்பு பற்றி அறிந்து அங்குள்ள வாழ்வை அறியவும் கூடும்.[24]

"போதக சமர்த்தர்."[25] "போதக சமர்த்தர்" என்ற விளக்கத்தினால்

மூப்பர் அப்பகுதியில் திறமை வாய்ந்தவராய் இருக்க வேண்டியது அவசியம் என்ற கருத்து அளிக்கப்படுகிறது. கூடுதலாக, அவர் போதிக்க விருப்பமுள்ள வராகவும் தமது போதிக்கும் திறமைகளை மேம்படுத்திக் கொள்ள விருப்ப முள்ளவராகவும் இருக்க வேண்டும் (எரே. 3:14, 15; எசே. 34:1-10). ஒரு மூப்பர் செய்ய வேண்டிய போதனை வகையைப் பற்றி J. W. மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு ஆய்வு செய்தார்:

> இது என்ன (வகையான) போதனையாக உள்ளது? இது பிரசங்கித்தல் அல்ல; ஏனெனில் பிரசங்கித்தல் என்பது உலகத்தாருக்குச் செய்யப்பட வேண்டியது, அது சபைக்குச் செய்யப்பட வேண்டியதல்ல, மற்றும் மூப்பர் என்ற வகையில் ஒரு மூப்பரின் ஊழியமானது சபையுடன் எல்லைக்குட்பட்டதாயிருந்தது. அப்போஸ்தலருக்கு இடப்பட்ட கட்டளையின் இரண்டாம் பாகத்தில் இந்த போதனை குறிப்பிடப் பட்டது தெளிவு: "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்." எனவே மூப்பர்களின் ஊழியமானது இந்த அளவுக்கு அப்போஸ்தலர் களின் ஊழியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் அது செய்யப்பட்ட வழி வகையின் ஒரு பகுதியை அதே ஊழியத்தை அப்போஸ்தலர்கள் செய்த வழிமுறையிலிருந்து நாம் ஒன்றுகூட்டிப் பெறலாம். எபேசு நகரில் தம்முடைய ஊழியத்தைப் பற்றிப் பவுல் அந்நகரின் மூப்பர்களுக்குக் கூறுகின்ற பொழுது தமது செயல் முறையை விவரிக்கின்றார், "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், *வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி."* அவர் இதை அவர்களுக்கு முன்பாக ஒரு முன்மாதிரியாக அமைக்கின்றார் (அப். 20:35); மற்றும் இவ்விதமாக நாம், அவர்கள் வீடுகள்தோறும் மற்றும் வெளியரங்கமாகப் போதிக்கக் கட்டளை பெற்றனர் என்று அறிகிறோம்.[26]

''சாந்த குணமுள்ளவர்''[27] (தமிழில் இது ''பொறுமையுள்ளவர்'' என்றுள்ளது). இது அக்கறையுள்ள, ஒரு தாய் தனது குழந்தைக்காகக் கொண்டுள்ளது போல மற்றவரின் உணர்வு பற்றி முழுமையான அக்கறையுள்ள ஒருவரை முன்னிறுத்துகிறது (1 தெச. 2:7-12).

''தன் சொந்தக் குடும்பத்தை[28] நன்றாய் நடத்துகிறவரும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவரும்." இது ஒருவரின் பிள்ளைகளை உள்ளடக்குகிறது, ஆனால் இது மற்றவர்களின் பிள்ளைகளை(யும்) உள்ளடக்கக் கூடும் என்பதைக் கவனியுங்கள். மூப்பர் தமது குடும்பத்தை *நன்றாய் நடத்துகிறவராய்*[29] இருக்க வேண்டும். இந்த ஊக்கம் வாய்ந்த, கவனமான, அக்கறைப் படுகின்ற, முன் நிற்கின்ற மற்றும் பராமரிக்கின்ற நிலைப்பாட்டிற்குள்ளாக உண்மையிலேயே *கீழ்ப்படிதல்*[30] உள்ளவர்களாயிருக்கும் பிள்ளைகளை உடையவராய் மூப்பர் இருக்க வேண்டும்.

கீழ்ப்படிதலின் இவ்வகையானது சகல "நல்லொழுக்கத்துடனும்"[31] சாதிக்கப்பட வேண்டும். மூப்பரால் முன்னிறுத்தப்படும் இந்தத்

தகப்பனுக்குரிய குணத்துடனும், அவரது பிள்ளைகளால் தரப்படும் பதில்செயலுடனும் தீத்து 1:6லிருந்து வரும் கூடுதலான பின்வரும் சிந்தனைகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள்: "... துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ..."

மீண்டுமாக, பவுலின் மொழிநடையைப் பரிசோதித்துப் பார்த்தல் என்பது மதிப்புமிக்கதாக உள்ளது. "விசுவாசம்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். Pisteuo என்ற வினைச் சொல்லின் விளக்கமான "விசுவாசம்" என்பது "உண்மையாய் இருப்பதாகச் சிந்தித்தல்; ஒன்றினால் இணங்க வைக்கப்படுதல் ... ஒன்றின்மீது உறுதியான நம்பிக்கை கொள்ளுதல் ..."[32] என்றுள்ளது. இது விசேஷமாக, கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டிருத்தலையும் அவருக்கு ஒருவர் தம்மையே ஒப்புக்கொடுப்பதையும் குறிக்கப் பயன்படுகிறது. அது தீத்து 1:6ல் உள்ளவர்கள் உட்பட, விசுவாசிகள் யார் என்பதை வேத வசனங்களினால் விவரிக்கிறது.

மூப்பரின் பிள்ளைகள் துன்மார்க்கர்கள்[33] என்று குற்றம் சாட்டப்படும் வகையில் வாழக் கூடாது. அவர்கள் அடங்காதவர்களாய்[34] இருக்கலாகாது. இவ்விரு வேண்டுகோள்களும்/நிபந்தனைகளும், மூப்பரின் பிள்ளைகள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்ற நேர்மறைக் கருத்தின் எதிர்க் கருத்தை - எதிர்மறையை - விளக்குகின்றன. NIVயானது, "மூப்பர் என்பவர் ... அடங்காமை மற்றும் கீழ்ப்படியாமையுடன் உள்ளனர் என்று வெளிப்படையாய்க் குற்றம் சாட்டுதலுக்காளாகாதுள்ள மற்றும் விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவராய் இருக்க வேண்டும்" என்று கூறுகிறது.

---

## *மூப்பர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் பற்றிய கேள்விகளும் உற்று நோக்கல்களும்*

*1. மூப்பர் என்பவர் விசுவாசத்தில் உள்ள ஒன்றுக்கு அதிகமான பிள்ளைகளைக் கொண்டிருக்க வேண்டுமா?*[35] பவுல், குறிப்பிட்ட ஒரு மனிதருக்கான குறிப்பிட்ட தகுதிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கையில், "இன்றியமையாமையின் பன்மை (பிள்ளைகள்) என்பது ஒருமையை உள்ளடக்கியிருக்கிறது" என்ற விதியை நடைமுறைப்படுத்துவதில் நாம் நீதிமான்களாக்கப்பட முடியுமா? பிள்ளைகளின் எண்ணிக்கையையா அல்லது இயல்பையா, எதனை வலியுறுத்துவது வசனப் பகுதியின் நோக்கமாக உள்ளது?

(தீத்து 1:6ஐப் போலவே அதே வகையான கிரேக்க அல்லது ஆங்கில (அல்லது தமிழ் மொழியில்) ஒரே வகையான அடிப்படைக் கட்டமைப்பு கொண்டுள்ள) 1 தீமோ. 5:16 போன்ற வசனப் பகுதியானது, பிள்ளைகளின் இயல்பைப் பற்றி வலியுறுத்துகிறது என்றே என்னை நம்பி இணங்கச் செய்கிறது, எனவே ஒரு மனிதர் அடங்காதவன் அல்லது துன்மார்க்கன் என்று குற்றம் சாட்டப்படாத ஒரு பிள்ளையைக் கொண்டிருப்பினும் அவர்

தகுதியுள்ளவராகலாம். ("பிள்ளை" மற்றும் "பிள்ளைகள்" என்பது பற்றி ஆதி. 21:7; மாற். 10:29; லூக். 20:29-31; 1 தீமோ. 5:4; 1 கொரி. 7:14 ஆகிய வசனப் பகுதிளை ஆழ்ந்து சிந்திக்கவும்.)

அதிக எண்ணிக்கை(யில் பிள்ளைகள்) இருப்பது பெற்றோரின் பொறுப்புக்கு கண்காணிப்புத் திறமைக்கு அதிக நிரூபணமாய் உள்ளதென்று கூறுவது, உண்மையில் வசனத்துடன் கூட்டுவதாகவே உள்ளது. பத்துப் பிள்ளைகளை உடைய ஒரு மனிதர், இரண்டு பிள்ளை களை உடையவரைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமாக நடத்துவத்துவத் திறன்கள் கொண்டுள்ளாரா? பன்மையில் இருக்க வேண்டும் என்பதற்காக இரு பிள்ளைகளையுடைய ஒருவர் ஒரு பிள்ளையுடைய மனிதரைக் காட்டிலும் இரு மடங்கு மட்டுமே திறன் கொண்டுள்ளாரா? இது ஒரு மதிப்புமிக்க/செல்லத்தக்க வழிகாட்டியாய் இருந்தால், பெரிய சபைகளில் உள்ள மூப்பர்கள் சிறிய சபைகளில் உள்ள மூப்பர்களைக் காட்டிலும் அதிகம் பிள்ளைகளை உடையவர்களாய் இருக்கலாகாதா? இப்படிப்பட்ட காரண அறிவை யார் நம்புகின்றனர்? இனப் பெருக்கம் செய்வதற்கான உடல் ரீதியான திறமையில் அல்ல, ஆனால் தேவனுடைய மக்களுக்குள்ளாக ஆவிக்குரிய பண்புகளைக் கட்டி எழுப்புவதில் ஒருவருக்குள்ள நடத்துவத்துவத்தின் மீதுதான் வலியுறுத்தம் உள்ளது.

வேதாகமம் எவ்விடத்திலும் பிள்ளைகளின் எண்ணிக்கையானது குடும்பத்(தைப் பராமரிக்கும்) திறனை அல்லது தகப்பனுக்குரிய மேற்பார்வையைத் தீர்மானிக்கிறது என்று கூறுவதோ அல்லது குறிப்பால் உணர்த்துவதோ கூட இல்லை. ஒரு தந்தை தனது ஒரே பிள்ளையை கிறிஸ்துவுக்குள் இருக்கும் பிள்ளையாக வளர்க்க முடியுமென்றால், அது அவர் இரு பிள்ளைகளையும் கூட அவ்வாறே வளர்க்க முடியும் என்று செயல் விளக்கப்படுத்துவதில்லையா? அவர் ஒரு பிள்ளையைக் கிறிஸ்துவுக் குள் கொண்டு வரத் தவறினால், அவருக்கு இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் இருந்தால் அவர்களை கொண்டு வரத் தவறாதிருப்பார் என்று யாரால் உறுதியளிக்க முடியும்? நாம் பிள்ளைகளின் இயல்பை, பண்பைக் காணாது விடுமளவுக்கு அவர்களின் எண்ணிக்கையைப் பற்றி அதிகமாய் அக்கறை கொள்ளாதிருப்போமாக. குடும்பத்தின் வனப்பைக் காண நாம் மறந்து போகுமளவுக்கு குடும்பம் எவ்வளவு பெரிதாய் உள்ளது என்பது பற்றி நாம் அதிகம் கவலைப்படாதிருப்போமாக.

*2. மூப்பர் ஒருவர் இரு பிள்ளைகளை உடையவராயிருந்து, அப்பிள்ளை களில் ஒருவர் விசுவாசமற்றவராக இருந்தால், அவர் மூப்பர் பதவியிலிருந்து விலகி விட வேண்டுமா?* முதலாவது, அவிசுவாசமுள்ளவரை மந்தைக்குள் திருப்பிக் கொண்டு வரக் கிடைக்கும் வழிகள் யாவற்றிலும் ஜெப நிறைவுடன் அவர் முயற்சி மேற்கொள்ள வேண்டும் - மற்றும் சகோதரர்கள் அவருக்குக் கால அவகாசத்தைப் புரிந்து கொள்ளுதலுடன் தர வேண்டும். ஒவ்வொரு நபருக்கும் சொந்த சித்தம் ஒன்றைத் தேவன் கொடுத்துள்ளதால், அவிசுவாசமுள்ள அந்தப் பிள்ளை, அவரை அல்லது அவளை திரும்பிக் கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட அன்பு மிக்க மற்றும் வேதாகம ரீதியான எல்லா முயற்சிகளுக்குப் பிறகும் கூட அடங்காத தன்மையில் போய்

விடலாம். விஷயம் அப்படியானால், மூப்பர் தம் சொந்தப் பிள்ளையிட மிருந்து ஐக்கியத்தை நீக்கிக் கொள்ள வேண்டும் (உபா. 21:18-21; மத். 18:15-18; 2 தெச. 3:6, 14, 15). அப்படிப்பட்ட மூப்பர் தம்மைக் கர்த்தரிடத்தில் உண்மையுள்ளவரென்று மெய்ப்பிக்க வேண்டும். அவர் ஊதாரிப் பிள்ளையைக் கிறிஸ்துவிடம் திரும்பக் கொண்டுவர முடிந்த தென்றால், அவர் நமது ஆத்துமாக்களுக்காக விழித்திருக்கிறவர் என்ற வகையிலிருப்பதை அவர் உண்மையிலேயே நிரூபித்துள்ளார் (எபி. 13:17).

மூப்பரின் பிள்ளை தொடர்ந்து அவிசுவாசத்திலேயே வாழ்ந்திருந்து, மூப்பர் அப்பிள்ளையைக் கிறிஸ்துவிடம் திரும்பிக் கொண்டு வர முயற்சி செய்யாமலும், அவ்விஷயம் பற்றி அக்கறை காண்பிக்காமலும் இருந்தால், அவர் சபையின் ஆத்துமாக்களுக்காகத் தாம் விழித்திருந்து காப்பதில் திறனற்றவர் என்பதை மெய்ப்பித்திருக்கிறார். அவர் மூப்பராய் இருக்க இனியும் தகுதியற்றவராக, அந்த ஊழியத்தைச் செய்வார் என்ற நம்பிக்கை வைக்க முடியாதவராக இருக்கிறார். இக்கட்டுக்குள்ளான ஒரு குடும்பத்திற்கு அவரால் எவ்வாறு ஆலோசனை அளிக்க முடியும் மற்றும் அவர்களின் சூழ்நிலைகளுக்கு அவர் ஞானமுள்ள தீர்வுகளைத் தருவார் என்று அவர்களால் எப்படி அவர் நம்பப்பட முடியும்?

*3. ஒரு மனிதருக்கு விசுவாசமுள்ள பிள்ளைகள் இருவரும், கிறிஸ்தவ ராவதற்கு மிகவும் இளைய வயதுடைய ஒரு பிள்ளையும் இருந்தால், அவர் மூப்பராகத் தேர்வு பெறச் சிந்திக்கப்பட முடியுமா?* இந்த சகோதரர் நிச்சயமாகவே விசுவாசமுள்ள மற்றும் கீழ்ப்படியாதவர்கள், அடங்காதவர் கள் என்று பெயரெடுக்காத பிள்ளைகளை உடையவராய் இருக்கிறார். குடும்ப சம்பந்தப்பட்ட நிலையில், அவர் தகுதிகளுக்குப் பொருந்துகிற வராயிருக்கிறார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட முடியாது என்றால், விசுவாசமுள்ள இரு பிள்ளைகளையுடையவராயிருந்து மூப்பராக நியமிக்கப்பட்டு, இரு மாதங்களுக்குப் பிறகு (அவ்வாறு நியமிக்கப் பட்டவரின்) மனைவி கர்ப்பம் அடைந்தால், என்ன நடக்கும்? ஏழு மாதங்களுக்குப் பிறகு அவர் அந்தக் கடைசிக் குழந்தை விசுவாசித்துக் கீழ்ப்படிய தேவையான காலமான பத்து முதல் பன்னிரண்டு ஆண்டுகள் (அல்லது அதற்கதிகமான காலம்) பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டுமா?

*4. ஒரு மூப்பரின் பிள்ளைகள் அவருடன் வாழாமல் உள்ள (வெளிச் சென்று விடும்) நிலையில் அவர் தம் பிள்ளைகளைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமா? அவரது பிள்ளைகள் (வேறு எங்காவது) இனியும் விசுவாசமில்லாத பிள்ளைகளாயிருந்தால், அவர் உண்மையுள்ளவராய் ஊழியம் செய்ய முடியுமா?* முதலாவது 3:4ல் உள்ள ‘‘தன் சொந்த வீட்டாரை’’ என்ற விளக்கத்தைக் கவனியுங்கள். இது மற்ற எல்லா விஷயங்களுடனும், “ஒரு குடும்பத்தை அமைக்கும் எல்லா நபர்களையும், ஒரு வீட்டார் .... ஒருவரின் பின் சந்ததிகள்” என்று அர்த்தப்படுகிறது. இந்த விளக்கமானது “கூரையின் கீழ்” (வீட்டில்) வசிக்கும் பிள்ளைகள் என்ற கருத்துக்கு அப்பால் செல்லுகிறது. இரண்டாவது, 1 தீமோ. 5:3-5 வசனப் பகுதியானது வசிக்குமிடமான இல்லத்தை விட்டுச் சென்றுள்ள நிலைக்குப் பிறகும் கூட ஒரு பிள்ளைக்குப் பயன்படுத்தத் தக்கதாகும். நமது சொந்தக்

குடும்ப உறுப்பினர்களுக்கு (வியாதி அல்லது துன்பம் வருகையில்) நாம் விசேஷித்த வகையில் கட்டுப்பாடு உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதை ஒப்புக் கொள்ளுதல் அடிப்படையானதாக உள்ளது, இது அவர்கள் நம்முடன் வசித்தாலும் வசிக்காவிட்டாலும் அவ்வித கட்டுப்பாடு உண்டென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. மூன்றாவது, நீதிமொழிகள் 22:6 வசனமானது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய கொள்கையொன்றை எடுத்துரைக்கிறது: பிற்காலத்தில் ஒரு பிள்ளை விசுவாசத்தில் நிலைத்து நிற்கவில்லையென்றால், இல்லத்தில் பயிற்சியில் குறைபாடு இருந்ததா? நமது பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் என்பது ''அவர்கள் ஆராதனை ஊழியத்திற்குச் செல்லுதலைக் காண்பது'' என்பதை விட மிகவும் அதிகமானதாக உள்ளது. நான்காவது, ஒரு மூப்பரின் பிள்ளைகள் விசுவாசமற்றவர்களாயிருந்தால், சகோதரர்கள் தங்கள் குடும்பப் பிரச்சனைகளை அவரிடத்தில் நம்பிக்கையுடன் கலந்துரையாடுவார்களா? கர்த்தர் அவரிடம் செய்யும்படி ஒப்புவித்த ஊழியத்தை அவரால் செய்ய முடியுமா? இந்தச் சூழ்நிலைகளில் உள்ள மனிதர் மூப்பருக்கு நியமிக்கப் பட்ட ஊழியத்தைச் செய்யத் தகுதியற்றவராக, செய்ய இயலாதவராக இருக்கிறார் என்பதே எனது சொந்த உறுதிப்பாடாகும்.

---

“புறம்பே இருப்பவர்களிடத்தில் நற்சாட்சி பெற்றவர்.”[36] இது சபைக்கு வெளியேயும் உலகத்தில் உள்ளவர்கள் மத்தியிலும் நற்சாட்சி கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகிறது. “கறைப்பட்ட கடந்த காலம் கொண்ட அல்லது கெட்ட பெயர் எடுத்த ஒருவர் தம் தவறுகளிலிருந்து மனந்திரும்ப முடியும், தனது வாழ்வை மாற்றிக் கொள்ள முடியும் மற்றும் அவர் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருந்தால் தேவனுடன் என்றென்றைக்கும் வாழும்படி (அவரது) இல்லம் செல்ல முடியும், ஆனால் சபையில் ஒரு மூப்பராக அவர் தகுதிப்படுத்தப்பட முடியாது” என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[37] இந்தக் கூற்றை மிகவும் அதிகமாக எடுத்துக் கொள்ளாதபடிக்கு முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, 1 பேதுரு 5:1ல் இருந்து, பேதுரு ஒரு மூப்பராயிருந்தார் என்று நாம் அறிகின்றோம். இருப்பினும் அவரது நற்பெயரானது எப்பொழுதுமே களங்கமற்றதாக இருந்ததில்லை; கடந்த காலத்தில், அவர் தாம் கர்த்தரை அறிந்திருந்ததை மறுதலித்திருந்தார் (மத். 16:22, 23; 26:69-75; யோவா. 18:10, 11).

“நல்லோர் மேல் பிரியமுள்ளவர்”[38] (தீத்து 1:8). ஒருவர் நல்லோரை விரும்புகின்றவராயிருந்தால், அவர் நன்மையை நாடுவார். தாமே அதை நாடுபவராய் இருக்கையில், அவர் மற்றவர்களிடத்திலும் அதை உற்சாகப்படுத்துவார்.

“நீதிமான்''[39] (தீத்து 1:8). மூப்பராய் இருப்பவர், பல வித நடத்துவ தன்மைகள், மாறுபட்ட சாத்தியக் கூறுகள், மற்றும் பன்முகப் பிரச்சனைகள் ஆகியவற்றைக் கையாள வேண்டியிருக்கும். அதிகாரத்தையும் பொறுப்பையும் உபயோகிப்பதில், அவர் நீதியுள்ளவராக, பாரபட்சமற்றவராக

இருப்பது என்பது எவ்வளவாய் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்! சபையின் ஒழுக்க நடவடிக்கை என்ற இன்றியமையாத வட்டாரத்தில் ஒரு மூப்பரின் தீர்ப்பானது தப்பெண்ணம், உணர்வு, அல்லது சுயநலம் போன்றவை இல்லாததாக இருக்க வேண்டும் (1 கொரி. 6:4-9ஐக் காணவும்).

"பரிசுத்தவான்"[40] (தீத்து 1:8). பரிசுத்தவானாக இருப்பது என்பது எப்படிப்பட்ட ஒரு அறைகூவலாக உள்ளது! சிந்தனையிலும் செயலிலும் சுத்தத் தன்மை என்பது உண்மையிலேயே, ஒரு மூப்பருக்கு ஒப்புவிக்கப் படும் ஊழியத்தை நிறைவேற்ற முயற்சி செய்கின்றவருக்கு ஒரு சொத்தாக உள்ளது (1 பேது. 1:15, 16; லேவி. 11:44, 45; 19:2; மத். 5:48ஐக் கவனியுங்கள்).

"இச்சையடக்கம் உள்ளவர்"[41] (தீத்து 1:8). தன்னையே அடக்குவதற்கு இயலாத மனிதரிடத்தில் மரியாதை விரைவில் தொலைந்து போகிறது. இந்த விஷயத்தில் ஒரு மூப்பர் பல வித நபரத்துவ தன்மைகளை எதிர்கொள்ப வராகவும் சோதனைக்கு உட்படுத்தப்படுபவராகவும் இருக்கக் கூடும்.

## தொகுப்புரை

மூப்பர் ஒருவர் இந்தத் தகுதிகளில் சிலவற்றைக் கொண்டிராமல், ஆனால் இன்னமும் கர்த்தரால் அவரிடத்தில் ஒப்புவிக்கப்படும் ஊழியத் தைச் செய்யத் தகுதிப்படுத்தப்படுபவராக இருக்க முடியுமா? இந்தத் தகுதிகளில் எவையாவது சாத்தியமற்றவைகளாய் உள்ளனவா?

தகுதிகளைச் சில தனிநபர்களுக்குப் பொருத்தமுடையவைகளென்று ஏற்படுத்த நாம் முயற்சி செய்யக் கூடாது, ஏனென்றால் தனி நபர்(கள்) இந்தத் தகுதிகளுக்குப் பொருத்தமுடையவர்களாக வேண்டும். தேவனே இந்தத் தர அளவையை அமைத்துள்ளார், இதிலிருந்து ஒன்றை எடுக்கிறவர் களுக்கு அல்லது இதனுடன் ஒன்றைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ.[42] "திருக்குகள் மற்றும் பிறழ்வுகளுக்குக் கீழ்ப்படிவதினால் கடைசியில் இது தனிநபருக்குப் பொருத்தமுடையதாக்கப்பட்டால், அப்படிப்பட்ட தனிநபரின் ஜீவனானது அவரிடத்திலிருந்து எடுத்துப் போடப்படுவதற்கு ஏதுவாக அவரது வாழ்வை (தவறான வகையில்) மேம்படுத்திக் கொண்டதற் கான பொறுப்புகள் யாவும் அவரைச் சார்ந்தவைகளாகவே உள்ளன. அவர் தாம் போதுமான அளவு நல்லவராயிருப்பதாக உணருவார். (ஆனால்) தேவன் தடை செய்கிறார்."[43]

மூப்பர்கள் செய்யும்படி ஒப்புவிக்கப்பட்டுள்ள மற்ற ஊழியங்களை வேத வசனங்களில்[44] படிப்பதும், அவர்களின் தகுதிகளுடன் தொடர்பு படுத்தி நாம் கவனித்துள்ள யாவற்றையும் இணைவு படுத்துவதும் நல்லதாயிருக்கும். என்ன ஒரு அழகிய இசைவு தெளிவாய் உள்ளது! மூப்பர்கள் தங்களின் தெளிவான ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களுக்கு இந்தத் தகுதிகள் அவசியமாய் உள்ளன. தேவனுடைய ஞானம் தெளிவாய் இருக்கிறது. செய்யப்பட வேண்டிய பணிக்குப் பொருத்தமான மனிதரைப் பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு நன்றாய்த் தேர்ந்தெடுத்தார்! பரிசுத்த ஆவியானவரால் நிறையப் பெற்ற ஆத்துமாக்கள் நம்மைக் கவனிக்கும்படி தேர்ந்தெடுக்கப்படவும், நம் ஊழியம் மற்றும் ஆவிக்குரிய தன்மை

ஆகியவற்றின் உச்சங்களுக்கு வழிநடத்திச் செல்லவும் நாம் இந்த தெய்வீக கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்திருப்போமாக (அப். 20:28; எபி. 13:7, 17).

## பாடம் 8: சபைக்கான அக்கறை - உதவிக்காரர்கள் (3:8-13)

சபையானது கண்காணிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் கண்டிருக்கின்றோம். கண்காணிக்கப்பட வேண்டியது யார் மற்றும் என்ன? சபையின் நடக்கை பற்றிப் பவுல் மற்ற விவரங்கள் தருகையில் குறிப்பிட்ட ஊழியர்கள் மற்றும் குறிப்பிட்ட ஊழியங்கள் ஆகியவை அவரால் அறிமுகப்படுத்தப்பட்டன.

கிரேக்க வார்த்தையான diakonos என்பது "உதவிக்காரர்" (3:8; பிலி. 1:1), "ஊழியக்காரர்" (servant) (மத். 23:11) மற்றும் "ஊழியக்காரர்" (minister) (எபே. 6:21) என்று புதிய ஏற்பாட்டில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் தரவழைப்பு என்னவாகக் கொடுக்கப்பட்டிருப்பினும், ஒவ்வொரு விஷயத்திலும் ஒரே கருத்து மேலோங்கியுள்ளது: *இது மற்றவர்களுடன், மற்றவர்களுக்காக, மற்றவர்களின் கீழ் ஊழியம் செய்கின்ற ஒரு மனிதரை அர்த்தப்படுத்துகிறது.* தேவனுடைய வசனத்தில், ஊழியம் செய்தல் மற்றும் ஊழியர்களாய் இருத்தல் என்பதன் கருத்து ஆயிரத்து அறுநூறு முறைகள் - அன்பு என்பதன் கருத்து காணப்படுவது போல நான்கு மடங்கான முறைகள் மற்றும் விசுவாசம் என்ற கருத்து காணப்படுவது போல ஐந்து மடங்கான முறைகள் - காணப்படுகின்றன. ஊழியம் செய்யப்படாமல் அன்பு அல்லது விசுவாசம் என்பது உண்மையில் காட்சிப்படுத்துப்படுவதில்லை.

### அட்டவணைப்படுத்தப்பட்ட தகுதிகள் (வ. 8, 10, 12)

பரந்த ஒரு கருத்தில், சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் கர்த்தரின் ஊழியக்காரராக இருக்கின்றார். இருப்பினும், கர்த்தருடைய ஊழியத்தின் முறையான மற்றும் திட்டவட்டமான கடமைகளைச் செய்வதற்காகச் சில மனிதர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். ரான் D. ஸ்மோத்தர்மேன் அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> செய்யப்படுகின்ற ஊழியத்தின் வகைகளைக் குறிப்பிடுவதற்குப் பல வகையான கிரேக்கச் சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் பயன் படுத்தப்படுகின்றன. Doulos என்பது ஒரு சாதாரண அடிமையைக் குறிக்கின்றது. Latros என்பது கூலிக்கு அமர்த்தப்பட்ட ஒரு வேலைக் காரன் என்று மறைமுகமாய்க் குறிக்கின்றது. Leitourgia என்பது பொதுஜன ஊழியரின் ஊழியத்தை அடையாளப்படுத்துகின்றது. Therapeo என்பதால் மருத்துவ சேவைகள் விளக்கியுரைக்கப்

> படுகின்றன. Diakonia என்பது அன்பினால் நிகழ்த்தப்படும் ஊழியமாக உள்ளது. இந்தச் சொற்றொடர்களில் ஏதாவதொன்றை "ஊழியம்" (பணி) என்பதைக் குறிக்கும் அடிப்படைச் சொற்றொடராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்க முடியும், ஆனால் கடைசிச் சொற்றொடரான diakonia என்பது ஒருவேளை சுயவிருப்பமான ஊழியத்தை விளக்கப்படுத்துவதால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். இவ்வார்த்தையானது பல்வேறு சந்தர்ப்பப் பொருட்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இது 37 முறைகள் காணப் படுவதாக ஆர்ன்டிட் மற்றும் கிங்கிரிச் ஆகியோர் அட்டவணைப் படுத்தியுள்ளனர். இதன் தொடர்புச் சொற்களான diakonein மற்றும் diakonos ஆகியவை முறையே 34 மற்றும் 30 முறைகள் இடம் பெற்றுள்ளன.[45]

விசேஷித்த ஊழியத்திற்காகப் பிரித்து வைக்கப்பட்ட மனிதர்கள், "உதவிக்காரர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர்,[46] மற்றும் இந்த விசேஷித்த ஊழியக்காரர்களுக்கான தகுதிகளை 1 தீமோத்தேயு 3:8-13 முன் வைக்கிறது. ஒவ்வொரு தகுதியான அர்த்தத்தையும் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாக உள்ளது. ஆகையால் பவுலின் அட்டவணையை நாம் ஆராய்வோம்:

"நல்லொழுக்கமுள்ளவர்கள்."[47] மதிப்பு, தீவிரத் தன்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்ப்பதன் மூலம் நாம், கர்த்தருடைய ஊழியத்தைப் பொறுத்தமட்டில் இலேசான அல்லது மரியாதைக் குறைவான எண்ணப்போக்கைக் கொண்டிராத மனிதர் ஒருவரைச் சித்தரிக்க முடியும். அவர் கர்த்தருடைய ஊழியமானது ஒரு கருத்தூன்றிய பணி என்பதை உணர்ந்தறிகின்றார்.

"இரு நாக்குடையவர்களாயிராமை."[48] எந்த ஒரு உதவிக்காரரும் தமது தற்போதைய தோழமையுடன் பொருத்தமாய் இருப்பதற்காக இரு மாறுபட்ட வழிகளில் பேசக் கூடாது. இது மூப்பரின் கீழ் ஊழியம் செய்து கொண்டு, மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய நாடுகின்ற ஒரு உதவிக்காரரை, இரு சாராரையும் பிரியப்படுத்த முயற்சி செய்கின்ற ஒரு இடைத் தரகராக இருக்கும்படியான ஒரு சோதனைக்கு உட்படுத்துவதாகி விடக் கூடும்!

"மதுபானப் பிரியராய் [இராமை]."[49] உதவிக்காரர் மதுபானத்தினால் கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு அவர் மதுபானத்தின் மீது பிரியம் கொண்டிருக்கக் கூடாது. இந்த அறிவுறுத்தலானது, வயிற்று நோவுக்காகச் சிறிது திராட்ச ரசம் (மதுபானம்) அருந்தும்படி தீமோத்தேயுவுக்குப் பவுல் அறிவுறுத்த முடிந்திருந்த ஒரு கலாச்சார அமைவில் கொடுக்கப்பட்டது (5:23ஐக் காணவும்). மதுபானம் அருந்துதல் என்பது ஒருவரின் செல்வாக்கைப் பாதிப்பதாக அல்லது மற்றவர்களை மதுபானம் பண்ணும் படி வழிநடத்துவதாக உள்ள கலாச்சார அமைவொன்றில் ரோமர் 14:21 வசனமானது கிறிஸ்தவர்களின் வழிகாட்டியாயிருக்க வேண்டும்!

"இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயிராமை."[50] கர்த்தருடைய ஊழியத்தில் இந்த எண்ணப்போக்கின் கனியானது யூதாஸ் காரியோத்தின் விஷயத்தில் சுலபமாய்க் காணப்படுகிறது (யோவா. 12:1-8; மத். 26:14-16).

*பண ஆசை என்பது விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ ஒரு மனிதனைப் பிடித்து, அவனது பணியில் புகழ்ச்சியை அழித்து, கர்த்தருடைய சபையில் ஒரு உதவிக்காரராய் இருப்பதில் அவருக்குள்ள நன்மையான செல்வாக்கை முற்றிலுமாக ஒழித்து விடும்.*

*"விசுவாசத்தின் இரகசியத்தைச்[51] சுத்த மனச்சாட்சியில்[52] காத்துக் கொள்ளுதல்." இவ்விடத்தில் 2 தீமோத்தேயு 1:14ஐயும் 1 தீமோத்தேயு 3:15ன் பிற்பகுதியையும் விசுவாசத்துடன் நிறைவேற்றுகின்ற ஒரு மனிதர் இருக்கின்றார்:*

> *உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருள் நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள் (2 தீமோ. 1:14).*
>
> *தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது (1 தீமோ. 3:15).*

*உதவிக்காரர் என்பவர் "ஆபரணங்களைப் பாதுகாத்து வைக்கும் பெட்டி"[53] என்று அழைக்கப்படுகிறார். சுவிசேஷத்தை ஒரு பொக்கிஷம் என்ற வகையில் அவர் உண்மையாகவே உணர்ந்தறிகின்றார். அவர் அதற்கு மேன்மையான அக்கறை கொண்டு, அதன்படி வாழ்கின்றார், இதை அவர் ஒரு தோற்றத்திற்காகவோ அல்லது வஞ்சிப்பதற்காகவோ செய்யாமல், அதன் மீதுள்ள மரியாதையினிமித்தம் செய்கின்றார். அது அவரது வாழ்வின் வழிமுறையாய் உள்ளது.*

*"குற்றம் சாட்டப்படாதவர்."[54] உதவிக்காரர்கள் அப். 6:3ல் விசேஷித்த ஊழியத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த சகோதரர்களைப் போல இருக்க வேண்டியது அவசியம்:*

> *"நற்சாட்சி பெற்றிருக்கிற" - மனிதர்களுக்கு முன் நேர்மை*
> *"பரிசுத்த ஆவி நிறைந்த" - தேவனுக்கு முன் நேர்மை*
> *"ஞானம் நிறைந்த" - ஊழியத்தில் நேர்மை*

*வசனம் 10ன் முதல் பகுதியைக் கவனியுங்கள். ஒருவர் "குற்றம் சாட்டப் படாதவராக" காணப்பட வேண்டுமென்றால், "சோதிக்கப்பட்டிருத்தல்"[55] என்ற அவருக்குரிய பணியானது நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். இது ஒரு தெளிவான பணியாக உள்ளது.*

*"ஒரே ஒரு மனைவியை உடையவர்." இந்தத் தகுதியானது மூன்று நிபந்தனைகளை ஏற்படுத்துகிறது: (1) அவர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனைவிகளை அல்ல ஆனால் ஒரே ஒரு மனைவியை உடையவராய் இருக்க வேண்டும், (2) ஒரு மனைவியைக் கொண்டிருக்க வேண்டும் என்பதால், அவர் திருமணமானவராயிருக்க வேண்டும், (3) அவர் தாம் கொண்டுள்ள ஒரு மனைவிக்கு உண்மையுள்ளவராய் இருக்க வேண்டும். காம இச்சை கொண்ட ஒரு மனிதர் கர்த்தரைத் தக்க வகையில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நம்பப்பட முடியாது.*

*“தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்கள்.”* உதவிக்காரர் தம் வீட்டாரை “நடத்துகிறவராய்”[56] மட்டுமல்ல, ஆனால் அதை “நன்றாய்”[57] செய்கின்றவராய் இருக்க வேண்டும். இவ்விடத்தில், தனது வீட்டை/வீட்டாரை தீமைக்கெதிராகக் காத்து பாதுகாக்கிற ஒரு மனிதர் முன்னிறுத்தப்படுகின்றார். அவர் தமது வீட்டாரைப் பராமரித்து அவர்கள் மீது கவனம் செலுத்துகிறார், தம் வீட்டார் மேன்மையானவர்களாக, நற்குணசாலிகளாக, மதிக்கத் தக்க நடையில் உள்ளவர்களாக இருக்கும்படி பராமரித்தலை நடைமுறைப் படுத்துகின்றார்! இப்படிப்பட்ட மனிதர் எவ்வளவு சிறந்த கணவராகவும் தந்தையாகவும் இருக்கின்றார்!

---

## விசேஷித்த பெண் ஊழியக்காரிகள் (வ. 11)

வசனம் 11ல் பவுல் பெண்களைப் பற்றிய சில திட்டவட்டமான அக்கறைகளைத் திடீரென்று உட்புகுத்தினார்:

> அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லா வற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்.

இந்தப் பெண்கள்[58] யாராய் இருக்கலாம் என்பது பற்றி பல்வேறு மொழி பெயர்ப்புகள் கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்த வேண்டுகோள்கள் யாருக்குக் கொடுக்கப்பட்டன? மூன்று கண்ணோக்குகள் முன்னிறுத்தப் பட்டுள்ளன:

1. இது உதவிக்காரர்களின் மனைவிகளைக் குறிக்கிறது. (KJV மொழி பெயர்ப்பானது, “அந்தப்படியே ஸ்திரீகளும் ...” என்று எடுத்துரைக்கிறது).

2. இது கண்காணிகள் மற்றும் உதவிக்காரர்கள் என்ற இரு சாராரின் மனைவிகளையும் குறிக்கிறது.

3. இது ஊழியக்காரிகள் என்ற வகையில் ரோமர் 16:1ல் பெபேயாளைப் போன்ற பாணியில் ஊழியம் செய்கின்ற பெண்களைக் குறிக்கிறது. (RSV மொழிபெயர்ப்பானது இவளை “உதவிக்காரி” என்று அழைக்கிறது. *Diakonon* என்ற கிரேக்க வார்த்தையானது “உதவிக்காரர்” என்பதற்கான *diakonos* என்ற வார்த்தையிலிருந்து வந்த சார்பு, ஒருமை, பெண்பால் சொல்லாக உள்ளது.)

பவுல் நான்கு திட்டவட்டமான தகுதிகளைக் கொடுத்தார். இந்தப் பெண்கள் *“நல்லொழுக்கமுள்ளவர்களாக”* (3:8ல் தரப்பட்டதைப் போல் மதிக்கத்தக்க மற்றும் மேன்மையான நடத்தையை உறுதிப்படுத்துவதா யிருக்கும்) இருக்க வேண்டும். இவர்கள் *“அவதூறு பண்ணாதவர்களாய்”*[59] இருக்க வேண்டும். பவுலின் வார்த்தையானது அதன் ஆண்பால் வடிவில் “தீமை” - எல்லாத் தீமையின் சக்தி - என்பதற்கான வார்த்தையாக உள்ளது. இவ்விதமாக, இராபர்ட்சன் அவர்கள் அவதூறுகளை “பெண்பால் - தீமைகள்”[60] என்று அழைத்தார். யோவான் 8:44ஐக் கவனியுங்கள்.

இவர்கள் *“தெளிந்த புத்தியுள்ளவர்களாய்”*[61] இருக்க வேண்டும். இது

தங்கள் நற்புகழ்ச்சியின் மீது சிந்தை கொண்டுள்ள பெண்களைச் சித்தரிக்கிறது. நிறைவாக, இவர்கள் "எல்லாவற்றிலேயும் உண்மையுள்ள வர்களாய்" இருக்க வேண்டும். இது எல்லாவற்றையும் உள்ளடக்குவதாக இருக்கிறது.

---

### பெண் உதவிக்காரிகள்? (1 தீமோ. 3:11)[62]

இவ்வசனத்தை (1) உதவிக்காரர்களின் மனைவியர், (2) மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோரின் மனைவியர் அல்லது (3) பெண் உதவிக்காரிகள் ஆகியோருக்குப் பயன்படுத்தப்படத் தக்கதாக்கி இவ்வசனத்திற்குச் சாத்தியமான மூன்று அர்த்தங்களை A.C. ஹெர்வீ அவர்கள் தொகுத்துரைத்தார்.[63] இன்றைய நாட்களில் உள்ள பல விளக்க உரையாளர்களைப் போலவே ஹெர்வீயும் மூன்றாவது அர்த்தத்தையே விரும்பித் தேர்வு செய்தார், ஆனால் இந்த விளக்கவுரையாளர் மூன்றாவது அர்த்தம் தவறானதாக உள்ளது என்பதில் உறுதியாய் இருக்கிறார்.

இங்கு கண்ணோக்கப்படும் பெண்கள் உதவிக்காரிகளாய் இருந்தால், இவர்களைப் பவுல் உதவிக்காரிகள் என்றே அழைத்திருப்பார், அவ்வாறு அவர் செய்யவில்லை என்பது உறுதி; மேலும், அடுத்த வசனத்திலேயே உதவிக்காரர்கள் "ஒரே மனைவியை உடைய புருஷர்களாய்" இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார், இதன் மூலம் அவர் இந்த அலுவலைப் பற்றிக் கொள்ளக் கூடியவர்கள் என்ற நிலையின் பார்வையிலிருந்து பெண்களை முற்றிலுமாக நீக்கி வைத்தார்.

Authorized Version மற்றும் Nestle Greek - English N.T. என்று பெயர் கொண்ட இரு வேதாகமங்களுமே இந்த வசனத்தில் "பெண்கள்" என்பதற்குப் பதில் இவ்வார்த்தையை "மனைவியர்" என்று மொழிபெயர்க்கின்றன, மற்றும் அது சரியான தரவழைப்புதான் என்பது சந்தேகத்திற்கிடமற்றதாய் உள்ளது. "பெண்கள்" என்ற வார்த்தை கிரேக்க மொழியி (வேதாகமத்தி)ல் பல பொருள் கொண்டுள்ளது என்பது நிரூபணமற்றதாக உள்ளது, அது அவ்வாறு கூட இருக்கட்டும்; ஆனால் சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தையானது மனைவியரையே அர்த்தப்படுத்துகிறது. இதைப் "பெண் உதவிக்காரிகள்" என்று வாசிக்கச் செய்தல் தேவ வசனத்தை முற்றிலும் மீறுதலாக உள்ளது. இந்த வசனம் பெண் உதவிக்காரிகளைப் பற்றி முற்றிலும் ஏதொன்றையும் கூறுவதில்லை; மற்றும் இது மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோரின் மனைவியருக்கு வேறெந்த தகுதியையும் விதிக்கவில்லை என அர்த்தப்படுவதாக யூகித்தல் என்பது, ஒரு தவறாகும் மற்றும் அப்போஸ்தலரான பவுலுக்கு எதிராகக் குற்றம் சாட்டுவதற்கு எந்த மனிதருக்கும் உரிமையில்லை. அலுவலர்களின் மனைவியருடைய தகுதிகளைப் பற்றிய இந்த வசனம் கடைப்பிடிப்பதற்கு முற்றிலும் கட்டளையிடப்பட்டதாக உள்ளது. தவறான வகையிலான மனைவி எந்த மூப்பரையும் அல்லது எந்த உதவிக்காரரையும் அழிக்கக் கூடும்; மற்றும் இங்கு காணப்படும் தகுதிகளை சபையின் ஒரு புது வகையான அலுவலர்கள் குழுவின் முழுமைக்கு (மட்டும்) நடைமுறைப்

*படுத்துதல் என்பது பவுலை ஒரு தெளிவான விடுபடுதலை ஏற்படுத்திய குற்ற உணர்வுடையவராக்குவதாக இருக்கும்.*

*ஆனால், பெபேயாள் ஒரு உதவிக்காரி (தமிழில் ஊழியக்காரி) என்று அழைக்கப்படுவதில்லையா (ரோமர் 16:1)? ஆம், உண்மைதான்; ஆனால் காவலர்கள் கூட தேவனுடைய உதவிக்காரர்கள் (ஊழியக்காரர்கள்) என்று அழைக்கப்படுகின்றார்களே (ரோமர் 13:4), இவ்விரு விஷயங்களிலும் உள்ள கிரேக்க வார்த்தை ஒன்றே (பால் தன்மை தவிர) ..... இந்தத் தொடர்பில், இந்தப் பெண்களை "உதவிக்காரிகளாக" ஏற்படுத்தியிருப்ப தாகப் பவுல் அர்த்தப்படுத்தியிருந்தால், அவர் வார்த்தையை அறிந்திருப் பார் என்பதும் இவ்வசனப் பகுதியில் அவர்களைத் தக்க விதத்திலான இயற்பெயரால் குறிப்பிட்டிருப்பார் என்பதும் நிச்சயம் என்பது கவனிக்கத் தக்கது. புதிய ஏற்பாட்டு வார்த்தையான "அப்போஸ்தலர்" என்பது அதன் அலுவல் ரீதியாகவும் வரையறுக்கப்பட்டதான கருத்திலும் பயன்படுத்தப் பட்டது மற்றும் அது பர்னபா மற்றும் சீலா போன்ற மனிதர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது, இவர்கள் திட்டவட்டமான கூற்றில் "அப்போஸ்தலர்களாய்" இருந்ததில்லை. "உதவிக்காரி" (ஊழியக்காரி) என்ற வார்த்தையானது இதே விதத்தில் இங்கு பெபேயாளுக்குப் பயன்படுத்தப்பட்டது, இது அவள் கர்த்தருடைய சபையில் அலுவல் ரீதியாக உதவிக்காரியாயிருந்தாள் என்று அர்த்தப்படுத்துவதில்லை. உதவிக்காரி என்பது "ஊழியக்காரி" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்புதான் என்பதையும், பல நூற்றாண்டுகளாக மொழி பெயர்ப்பாளர்கள் அலுவல் ரீதியாக சபை அலுவல் அர்த்தப்படுத்தப் பட்டபொழுது மட்டுமே ''உதவிக்காரி'' என்ற வார்த்தையைத் தரவழைத்தனர் என்பதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். ஆனால் ரோமர் 13:4 மற்றும் ரோமர் 16:1 ஆகியவற்றின் விஷயத் தில், அவர்கள் இதை "ஊழியக்காரி" என்றே தரவழைத்தனர்.* Authorized Version *என்ற பெயர் கொண்ட வேதாகமம் இவ்விரு இடங்களிலும் இந்த வழி முறையிலேயே தரவழைக்கிறது; மற்றும் ரோமர் 16:1ல் உதவிக்காரி (ஊழியக்காரி) என்ற அலுவல் ரீதியான இயற்பெயரின் நன்கொடையான செலுத்துதலானது தொடர்ந்து வரும் சில வசனங்களில் முற்றிலும் சரியற்ற தாகவும் தவறாய் வழிநடத்துவதாகவும் உள்ளது.*

*பெண் உதவிக்காரிகளை நியமிக்கும்படி சபைகளுக்குக் கட்டளை யிடப்பட்டிருந்ததென்றால், அதைப் பற்றிய பதிவானது புதிய ஏற்பாட்டிலோ அல்லது வரலாற்று ரீதியான சபையின் வழக்கங்களிலோ எங்குள்ளது? பெண் உதவிக்காரிகள் நியமிக்கப்படுகின்ற பொழுது, அவர்கள் தெய்வீக அதிகாரமின்றி நியமிக்கப்படுகின்றனர் மற்றும் அவர்களின் நியமனத்திற்கு வழிகாட்டியாகப் பயன்படும் தகுதிகளின் அட்டவணை போதிய அளவில் இல்லாமலேயே நியமிக்கப்படுகின்றனர். 11 என்ற இந்த வசனம் பெண் உதவிக்காரிகளை நியமிப்பதற்குத் தர அளவையாக பொருள் கொள்ளப்பட வேண்டியதாயிருந்தால், பவுல் மூப்பர்களுக்குப் பதினைந்து தகுதிகளையும் உதவிக்காரிகள் எனப்படும் இவர்களுக்கு நான்கு தகுதிகளை மட்டும் அட்டவணையிட்டது ஏன்*

என்பது விசாரிக்கப்படலாம். இப்படிப்பட்ட ஒரு கண்ணோக்கம் கருத்துள்ளதாக இருப்பதே இல்லை.

---

## பணியும் பலன்களும் (வ. 13)

உதவிக்காரர்கள் "நன்றாய்" ஊழியம் செய்ய வேண்டும் என்ற பவுலின் சொல் விளக்கத்திற்கு விசேஷித்த கவனம் கொடுக்கப்பட வேண்டியது அவசியம். சில விஷயங்களில் உதவிக்காரர்கள் ஒப்புவிக்கப்பட்ட ஊழியப் பணிக்குப் புறம்பே செயல்பட்டுள்ளனர். நிறைவான தீர்மானங்கள் மூப்பர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட வேண்டும் (அவர்கள் தேவனுடைய வசனத்தைத் தங்கள் வழிகாட்டியாகக் கொள்ள அனுமதிக்கின்றனர் என்ற அனுமானத்தின் பேரில் இவ்வாறு செய்யப்பட வேண்டும்). மூப்பர்களுடன் ஒன்றுகூடி மற்றும் பெரும்பான்மையான அதிகாரத்தினால் மூப்பர்களை "வாக்கெடுப்பில் தோல்வியுறச் செய்தல்" என்பது உதவிக்காரர்களுக்கு வெட்கம் நிறைந்ததாகவும் பாவம் நிறைந்ததாகவும் உள்ளது. இவைகள் நிகழ்கின்ற பொழுது மூன்று தவறுகள் சம்மந்தப்பட்டிருக்கின்றன: (1) மூப்பர்கள் தாங்கள் செய்ய வேண்டிய முறைப்படியாகக் கண்காணிப்புச் செய்யாதிருத்தல் (எபி. 13:17). (2) உதவிக்காரர்கள் தாங்கள் செய்ய வேண்டிய முறைப்படியாக ஊழியம் செய்யாதிருத்தல். (3) பெரும்பான்மை அதிகாரம் என்பது வசன ரீதியானதல்ல ஏனெனில் யாவரும் ஒப்புக் கொண்டிருக்க, இளம் மனிதர்கள், மூப்பர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, சபையானது கிறிஸ்து போதித்த யாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டியதாக உள்ளது. (1 கொரி. 1:10; 1 பேது. 5:5; மத். 28:20 ஆகியவற்றைக் காணவும்.) உதவிக்காரர்கள் சரியானவர்களாயிருப்பினும், அந்த "சரியான தன்மையை" வெளிப்படுத்து வதில் அவர்கள் வேதாகம ரீதியான வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் (1 தீமோ. 5:1, 19, 20; 1 பேது. 5:1-6).

உதவிக்காரர்கள் "நன்றாக" ஊழியம் செய்ய வேண்டும் என்ற பவுலின் புத்திமதியிலிருந்து பொங்கி ஊற்றெடுத்துப் பாய்கின்ற வளமையைக் கவனியுங்கள். கடைமையின் மீதான அர்ப்பணிப்பானது அரைமனதுடன் கூடிய முயற்சிக்கு இடமளிப்பதில்லை. அர்ப்பணிப்புள்ள ஒரு ஊழியக் காரர், அறிவுறுத்தல்களை நன்றாய்ச் செயல்படுத்துகிறவராய் இருப்பார். நிச்சயமாகவே அவர் தெய்வீக ஆணைகளின்படி கடமையாற்றுவார். அவருடைய அடிச்சுவடுகளுடன் தொடரும் மேன்மை எப்படிப்பட்டதாக இருக்கும்! ஸ்மோத்திர்மேன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> தொடக்க காலக் கிறிஸ்தவ சமுதாயம், *diakonia* என்பது மிகவும் நடைமுறைக்கு உகந்த வழிமுறை என்றும் தேவைப்படுகிற எந்த ஊழியத்தையும் செய்ய வேண்டியது என்றும் புரிந்து கொண்டிருந்தது (அப். 4:35) … மூன்றாம் நூற்றாண்டு காலத்தில் ஊழியத்தின் மேன்மையின் மீதின்றி, மூப்பருக்கு உதவிக்காரர் கீழ்ப்படிதல்

என்பதன் மீது வலியுறுத்தம் செய்யப்பட்டது … ஒவ்வொரு யுகத்திலும்/ஒவ்வொரு காலத்திலும் உதவிக்காரர்கள் தற்காலத் தேவைகளுக்கிணங்க ஊழியம் செய்யக் கூடிய வகையில் உதவிக்காரர்களின் கடமைகள் பற்றி புதிய ஏற்பாடு வேண்டுமென்றே மங்கலாகக் குறிப்பிட்டுள்ளது என்பது முற்றிலும் சாத்தியமான தாகவே உள்ளது … புதிய ஏற்பாடு தனது அமைதியினால் தொடக்க கால உதவிக்காரர்களை அவர்கள் தகுதிப்படுத்தப்பட்ட எந்தத் திறனிலும் ஊழியம் செய்யவும், அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட எந்த ஊழியத்தையும் நிறைவேற்றவும் அனுமதித்தது. இன்றைய நாட்களின் உதவிக்காரர்கள் இதற்குக் குறைவாகச் செய்ய இயலாது.[64]

அர்ப்பணிப்புள்ள உதவிக்காரர்களால் செய்யப்படக் கூடிய இப்படிப்பட்ட அழகிய ஊழியமானது கவனிக்கப்படாமலோ அல்லது பலனளிக்கப்படாமலோ போகாது. தெளிவான கடமைகளுக்குத் தேவன் ஒருக்காலும் ஆசீர்வாதங்களையும் பலன்களையும் அளிக்காமல் இருந்த தில்லை. அவர் அளிக்கும் பலன்கள் ஏராளமானவைகளாக உள்ளன: உதவிக் காரரின் இயல்பு - அவர் என்னவாகிறார் என்பது - வனப்பு, மகிழ்வு, முன் எச்சரிக்கை, மனவிருப்பம், மற்றும் தளராத உழைப்பு ஆகியவற்றின் விஷயமாய் இருக்கும். உதவிக்காரர் ‘‘ஒரு உயர்ந்த தர நிலையை’’ மேம்படுத்துவார் (3:13) - அது ஒரு நல்ல நிலை ஆதாரமாக இருக்கும். சபை அவருடன் ஊழியம் செய்வதில் அகம் மகிழும். மேலும் உதவிக்காரர் “விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும்” (3:13) ஆதாயமாகப் பெறுவார். உச்சக்காட்சியாக, தளராது உழைக்கும் உதவிக்காரருக்குப் பரலோகம் இல்லிடமாகும். இதைக் காட்டிலும் அதிகமானவற்றை எவரொருவராவது கேட்க முடியுமா?

இன்றைய நாட்களின் சபைக்குப் பவுலினால் விவரிக்கப்பட்ட வகையிலான ஊழிய நடத்துனர்கள் தேவை. இந்த முக்கியமான விசேஷித்த ஊழியங்களுக்குச் சகோதரர்களைத் தயாரிப்பதில் சபைகளும் சுவிசேஷகர்களும் எவ்வளவு போதனையும் பயிற்சியும் அளிக்கின்றனர்?

## பாடம் 9: சபைக்கான அக்கறை - ஒரு தொகுப்புரை (3:14, 15)

### நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? (வ. 14, 15அ)

சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் ‘‘தாம் எவ்வாறு நடந்து கொள்ள[65] வேண்டும்” என்பதை அறிய அனுமதித்தல் என்பதே தீமோத் தேயுவுக்குப் பவுல் எழுதியதின் நோக்கமாய் இருந்தது. தக்க வகையிலான நடக்கையைக் கற்றுக் கொள்ளுதலில், முன்புள்ள நடக்கையை “முற்றிலும் திருப்பிப்போடுதல்” அல்லது “முற்றாகத் திரும்புதல்” என்பது உள்ளடங் குகிறது. ‘‘சரிப்படுத்துதல்களை ஏற்படுத்துதல்’’ அல்லது ‘‘வடிவாக்கம்

எழுப்புதல்" என்பவை நமக்கான மிகச் சாதாரணமான சொல் விளக்கங் களாய் இருக்கலாம். கிறிஸ்துவுக்குள் *மாறுகின்ற* மக்கள் புதிய படைப்புகள் ஆகின்றனர் (2 கொரி. 5:17). தேவனுடைய கிருபை மற்றும் அறிவில் வளருதலால் மட்டுமே உதிக்கக் கூடிய முற்றான திரும்புதல்கள் சில அல்லது பலம் மற்றும் தைரியத்தின் வெளிப்பாடுகள் சில, தூய்மை மற்றும் பரிசுத்த தன்மையின் மேம்பாடுகள் சில இல்லாமல் கிறிஸ்துவுக்குள் மாபெரும் மூப்பர்களும் உதவிக்காரர்களும் வளர்ச்சியடைய மாட்டார்கள் (2 பேது. 3:18; 2 தீமோ. 1:7; 2:1).

## சபையை எவ்விதமாகக் கண்ணோக்க வேண்டும் (வ. 15ஆ)

நாம் "ஜீவனுள்ள தேவனுடைய சபையாக" இருக்க வேண்டும் என்ற பவுலின் வலியுறுத்தத்தினால் நமது நடக்கையின் மீதான கவனக் குவிப்பு விரிவாக்கப்படுகின்றது. உயிருடன் உள்ள ஒரு தேவன் இறந்துபோன குழந்தைகளைப் பெறுவதோ அல்லது மெலிந்துபோன, பட்டியலற்ற சந்ததி யினரை உண்டாக்குவதோ இல்லை! *ஜீவனுள்ள* தேவனுடனான நமது உறவானது நம்மை நாமே சரியான நடக்கையின் மாதிரிகளில் நடத்திக் கொள்வதற்கான திறவுகோலாக உள்ளது (மத். 5:48; பிலி. 2:22; 1 யோவா. 3:1-3). நம்மை நாம் கிறிஸ்துவின் சபையாக நடத்துவது எவ்வாறு என்பது நாம் அவருடைய சபையை எவ்வாறு கண்ணோக்குகிறோம் என்பதைச் சார்ந்ததாக இருக்கும்.

### சத்தியத்திற்குத் தூண்

கிறிஸ்தவர்கள் (சபை) சத்தியத்தின் தூணாக உள்ளனர் என்ற வகையில் அமைந்த பவுலின் உருவகக் கூற்றைப் புரிந்து கொள்வதில் தீமோத்தேயு வுக்குச் சிரமம் எதுவும் இருந்திராது என்பது உறுதி. வெளி. 19:6-8; மத். 5:16; 2 தீமோ. 2:19; 1 தீமோ. 6:20; மற்றும் தீத்து 2:10-14 போன்ற வசனப் பகுதிகள், தேவனுடைய மக்கள் உபதேசத்தை அல்லது சத்தியத்தை எவ்வாறு அலங்கரிக்க (அதாவது, "நம்முடைய இரட்சகராகிய தேவனு டைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத் தக்கதாக"; தீத்து 2:9) முடியும் என்பதை அடையாளப்படுத்துகின்றன. அதாவது, *தூண்கள்* என்ற வகையில் நாம் தீமோத்தேயு இந்த நிருபத்தைப் பெற்ற பொழுது இருந்த அமைப்பில் விசேஷித்த வகையில் பொருந்துகின்றவர்களாயிருப்போம். இந்த நிருபமானது ஆர்ட்டெமிஸ் அல்லது தியானாளின் கோயில் (அப். 19:28) இருந்த இடமான எபேசு நகரில் தீமோத்தேயு இருந்த பொழுது (1:3) அவரை வந்து அடைந்தது. இதைப்பற்றி பார்க்ளே அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> அந்தக் கோயிலானது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக இருந்தது. அதன் தூண்கள் அதன் வனப்புகளில் ஒன்றாயிருந்தன. அதற்குள் நூற்று இருபத்தி ஏழு தூண்கள் இருந்தன, அவை ஒவ்வொன்றும்

*ஒவ்வொரு அரசரின் கொடையாக இருந்தது. அவை யாவும் சலவைக் கற்களினால் செய்யப்பட்டிருந்தன, மற்றும் அவற்றில் சில கற்கள் பதிக்கப்பட்டவையாகவும் தங்கத்தினால் மூடப்பட்டவைகளாகவும் இருந்தன. ஒரு தூண் என்பது எவ்வளவு அழகு நிறைந்த விஷயம் என்பதை எபேசு நகர மக்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். இவ்விடத்தில் தூண் என்ற வார்த்தையானது காட்சிப்படுத்துதல் என்ற வகையில், உள்ள அளவுக்கு, ஆதாரமாயிருத்தல் - முட்டுக் கொடுத்தல் என்ற வார்த்தையில் அடங்கியுள்ள அர்த்தம் - என்பது அதிகமாய்க் கொண்டிருப்பதில்லை. புகழ் பெற்ற மனிதர் ஒருவரின் சிலையானது மற்ற சாதாரண பொருட்கள் எல்லாவற்றிற்கும் மேலாக, தொலைவிலிருந்து கூடத் தெளிவாகக் காணும்படியாக ஒரு தூணின் மேல் பெரும்பாலும் அமைக்கப்படுவதுண்டு. எல்லா மனிதர்களும் காணும்படியாக சத்தியத்தைத் தாங்கி நிற்றல் என்பது சபையின் கடமையாக இருக்கிறது என்பதே இவ்விடத்தில் உணர்த்தப்படும் கருத்தாக உள்ளது. சத்தியத்தைக் காட்சிப்படுத்துதலும் செயல்விளக்கப் படுத்துதலும் சபையின் கடமையாக உள்ளது.*[66]

## சத்தியத்திற்கு ஆதாரம்

*"தூணாக"* இருத்தல் என்ற கருத்து உபதேசத்தை அலங்கரிக்கும்படி சபையை அழைக்கின்றதாயிருந்தால், அடுத்த சொற்றொடரானது "சத்தியத்திற்கு ஆதாரம்" என்ற வகையில் உபதேசத்தைத் தற்காக்கும்படி சபையை அழைக்கின்றது. RSV மொழிபெயர்ப்பானது "support" (ஆதாரம்) என்ற வார்த்தை இருக்க வேண்டிய இடத்தில் "bulwark" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. இங்கு உறுப்பினர்களாய் இணைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பொறுப்பானது இதில் அதிகம் தெளிவாக முன்னிறுத்தப்படலாம். கிறிஸ்தவர்கள், சத்தியத்தைக் காக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளனர் (1 தீமோ. 6:20, 21; 2 தீமோ. 1:14). இந்தக் காத்தலானது, சத்தியம் நிலைநிற்க முடியாது அல்லது அழிக்கப்பட்டு விடும் என்ற பயத்தினால் (மத். 24:35ஐக் காணவும்) ஏற்பட்டதல்ல, ஆனால் கள்ள தீர்க்கதரிசிகளும் கள்ள போதகர்களும் அதை (சத்தியத்தை) தவறாய்ப் பயன்படுத்தி விடுவார்கள் என்ற கவலையினால் ஏற்பட்டதாக உள்ளது (2 தீமோ. 3:2-13; ரோமர் 16:17, 18; 2 பேது. 2:1-3ஐக் காணவும்). வங்கியொன்றில் பணம் களவாடப்பட்டது என்றால், களவு செய்தவர் அந்தப் பணத்தை அழித்துப் போடுவார் என்று நாம் எதிர்பார்க்கிறோமா? அல்லது அப்பணத்தை அவர் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலிருந்து நமது கவலை எழுகின்றதா? மனிதர்களோ அல்லது பிசாசோ சத்தியத்தை அழிக்கக் கூடும் என்று கிறிஸ்தவர்கள் அஞ்சத் தேவையில்லை; மாறாக, சத்தியம் தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து அதை நாம் காத்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய மதிப்புமிக்க சத்தியமானது பின்னாட்களில் கேட்பதற்கும் விசுவாசிப்பதற்கும் தூய்மையாகக் காக்கப்பட வேண்டும்.

கர்த்தர் தம்முடைய பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் இட்டுள்ளதால் (2 கொரி. 4:1-7), நாம் அதைக் காத்து (2 தீமோ. 1:13, 14), கல்லாதவர்களாகவும் உறுதியில்லாதவர்களும் தங்கள் சுய அழிவுக்கும்

*மற்றும் தங்கள் கூற்றைக் கேட்பவர்களின் அழிவுக்கும் ஏதுவாக வேத வசனங்களைப் புரட்டிப் போடாதவாறு அவர்களிடமிருந்து நாம் வசனங்களைக் காக்க வேண்டும் (2 பேது. 3:16-18; ரோமர் 16:17, 18).*

*சபையானது கட்டப்பட்ட அஸ்திபாரமாகக் கிறிஸ்து இருப்பது போல (1 கொரி. 3:10, 11) சபையின் உறுப்பினர்கள் தூண்களாகவும், ஆதாரங்களாகவும் இருக்கின்றனர். நாம் சரியானதைச் செயல்விளக்கப்படுத்தி எல்லா மனிதர்களும் சத்தியத்தை விசுவாசித்துக் கீழ்ப்படிவதற்கான ஒரு காரணத்தைக் காட்சிப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம் (எபே. 3:1-12, விசேஷமாக வ. 8-10).*

---

## *சபையின் நம்பிக்கை (வ. 16)*

*3ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட புத்திமதி ஒவ்வொன்றையும் நியாயப்படுத்திய பவுல் வசனம் 16ல் மாபெரும் உச்சக் காட்சிக்கு நகர்ந்தார். கிறிஸ்துவின் சபையாக நாம் செய்கின்ற அல்லது ஆகின்ற எல்லாம் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு பலம் வாய்ந்த இரகசியத்திலிருந்து முளைத்தெழும்புகிறது. வெளிப்படுத்தப்பட்ட அந்த இரகசியமானது கிறிஸ்துவில் மையம் கொண்டு, தெய்வீக வனப்பு மற்றும் ஆசீர்வாதங்களின் தைரியத்தை/நம்பிக்கையை எதிரொலிக்கிறது. பாவிகளுக்குள் தேவ பக்தியைச் சாத்தியமாக்குகிற அந்த வெளிப்படுத்தப்பட்ட இரகசியத்தின் பெருமதிப்பு அல்லது மாபெரும் தன்மையானது போட்டியெதுவுமற்றதாகச் செல்லுகிறது. பவுல் கூறிய வகையில், இந்த மாபெரும் இரகசியமானது "பொதுவான அறிக்கையினால்"[67] அறிவிக்கப்படுகிறது. ஆகையால், வசனம் 16, சத்தியத்திற்காக சபை நிலைநிற்கக் காரணமாகிறது. இது இனியும் ஒரு இரகசியமாக இருப்பதில்லை (எபே. 3:3-6; ரோமர் 16:25-27). 3:9ல் பவுல், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியில் காத்துக் கொள்ளுதல் பற்றிக் குறிப்பிட்டார். நாம் பற்றிக் கொண்டுள்ளது என்ன என்பதை நாம் அறியாதிருந்தால், அதை நாம் செய்ய முடியாது. நாம் பற்றிக் கொண்டுள்ளது என்ன என்பதை நாம் அறிந்துள்ளோம் - அது வசனம் 16ல் பவுல் "மாபெரியது"[68] என்று அறிவித்ததாக, ஒரு விலையேறப்பெற்ற திட்டமாக அறியப்பட்டுள்ளது! இப்பொழுது திரை நீக்கப்பட்டுள்ள தேவனுடைய இரகசியமானது அதன் பரப்பெல்லை, தனிச் சிறப்பு, மற்றும் பரிசுத்த தன்மை ஆகியவற்றில் மகா பெரியதாக உள்ளது. இதன் மாபெரும் தன்மையை வலியுறுத்தப் பவுல் பல காரணங்களைக் கொடுத்தார்:*

*1. தேவனுடைய மாபெரும் கொடை: அவர் வந்து சேர்ந்தார். "மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டவர்" (யோவா. 1:1-4, 14; 3:16; கலா. 4:4; பிலி. 2:5-8).*

*2. ஒரு மாபெரும் சாட்சியம்: அவர் அங்கிகரிக்கப்பட்டார். இயேசு கிறிஸ்து "ஆவியானவரால் மெய்ப்பிக்கப்பட்டார்"[69] (யோவா. 16:7-14; லூக். 24:45-49; அப். 1:5-8; 2:1-4, 15-24, 29-41; ரோமர் 1:4; 8:11). இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள நீதிமானாக்குதல் என்பது பொல்லாங்கை மன்னித்தல் என்ற கருத்தில் அல்ல (ஏனெனில் இயேசு பொல்லாங்கு எதுவும்*

செய்திருந்ததில்லை), ஆனால் மனிதர்களால் நீதியானது முற்றிலும் தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டதை மெய்ப்பிக்கும் கருத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது (ஏசா. 53:4-8; அப். 8:28-39; 1 பேது. 2:21-25).

*3. ஒரு மாபெரும் கூட்டத்தார்: அவர் ஆராதிக்கப்பட்டார்.* கிறிஸ்து "தேவ தூதர்களால் காணப்பட்டார்" (1 பேது. 1:10-13; எபே. 4:8-10; சங். 68:17-19; பிலி. 2:9, 10; வெளி. 5:11, 12). பரலோகம் பாராட்டியது!

*4. ஒரு மாபெரும் வரலாறும் அது கூறி முடிக்கப்படுதலும்: அவர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் உரிமைகோரப்பட்டார்.* கிறிஸ்து "இனங்களின் மத்தியில் அறிவிக்கப்பட்டார்" (மத். 28:18-20; அப். 1:8; கொலோ. 1:23; வெளி. 1:7; மத். 25:31-46).

*5. ஒரு மாபெரும் பதில்செயல்: அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.* கிறிஸ்து "உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்" (1 பேது. 1:18-23; அப். 2:41; 5:14; 9:31; ரோமர் 15:18, 19; 16:25-27; பிலி. 2:9-11).

*6. ஒரு மாபெரும் நிலைப்பாடு: அவர் (பரத்துக்கு) ஏறிப் போனார்.* கிறிஸ்து "மகிமையில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்" (அப். 1:9-11; எபி. 2:9; எபே. 1:18-23; யோவா. 17:5; வெளி. 5:6-14).

இவ்வரலாற்றின் (இரகசியத்தின்) ஒவ்வொரு பகுதியும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மையம் கொண்டுள்ளது, இது *மாபெரிய தாக* உள்ளது. இயேசு யார் என்பதையும் அவர் செய்துள்ளது என்ன என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். ஜீவனுள்ள தேவனுடைய குமார னாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுடைய இரகசியமானது உண்மை யான வழிமுறையில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது!

தேவனுடைய மாபெரும் தன்மை மற்றும் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய இரகசியம் ஆகியவற்றை அறிவிப்பதற்குப் பின்வரும் வார்த்தைகள் தகுதியான ஒரு தொகுப்புரையாகப் பணியாற்றுகின்றன:

> இது, இராஜரீகமான மற்றும் சர்வ வல்லமையுள்ள அன்பின் மாபெரும் நிறைவாகக் கருதப்படுகிறது, மற்றும் நீதியும் இரக்கமும் உள்ள சூரியனின் முழு வட்ட முகப்பிலிருந்து வீசுகிற கதிர் போல வலிவார்ந்த முறையில் வடிவு பெற்ற "நமது இரட்சகராகிய தேவனு டைய, மனிதன் மீதான அன்பை"யும் குறிக்கிறது - இது எல்லா நிகழ்ச்சிகளிலும் பெரியதான ஒன்றின் புரிந்து கொள்ளப்பட்ட வடிவமைப்பாகவும் தொகுப்பாகவும் உள்ளது; கர்த்தராகிய இயேசுவின் பதவியமர்வானது முற்றான இராஜரீகத்துடன், அவரே தேவனுடைய படைப்பு முழுமைக்கும் ஒரே அதிபதியாக ஆளுதல் என்பதைக் கொண்டுள்ளது ... இது மனிதர்கள் மத்தியில், "அண்டத்தில் சுற்றுலா செல்லுதல்" என்று அழைக்கப்படும்; ஆயினும் இது மிகவும் தகுதியான ஒரு சொற்றொடராகவே உள்ளது. சொல்லப் போனால், இது ஒரு மாபெரும் சகாப்தமாக, நித்தியத்தில் ஒரு புது யுகமாக, "காலங்களின் தொகுப்பாக" உள்ளது ... இயேசுவை அண்டத்தின் ஏகாதிபதி என்ற வகையில் கிறிஸ்துவாக்கும் அல்லது அபிஷேகம் செய்யும் இந்த நிகழ்ச்சியானது ஒரு மாபெரும், கம்பீரமான, மற்றும் ஒப்புயர்வற்ற, எப்பொழுதும் வெளிப்படுத்தப் படும் நிகழ்ச்சியாகவே உள்ளது.[70]




*இப்பொழுது நாம் அவருடைய உன்னதமான மேன்மையைப் பற்றி அறிகின்றோம் (வ. 16)!*

---

குறிப்புகள்:

[1]*பவுலையும் பர்னபாவையும் பரிசுத்த ஆவியானவர் அனுப்பிய பொழுது செய்யப்பட்ட ஊழியத்தை சுவிசேஷகர்கள் கவனிக்க வேண்டியது அவசியம் (அப். 13:1-3). அவர்கள் வெறுமனே சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதுடன் மட்டும் தங்கள் ஊழியத்தை முடித்துக் கொள்ளவில்லை. அவர்கள் சென்று, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, மற்றும் விசுவாசித்தவர்களை ஞானஸ்நானப்படுத்தியதுடன் (ஊழியத்தை) முடித்துக் கொள்ளவில்லை. அவர்கள் சென்று, பிரசங்கித்து, விசுவாசித்தவர்களை ஞானஸ்நானப்படுத்தி, மற்றும் சபைகளை நாட்டியதுடன் (ஊழியத்தை) தங்கள் பணியை முடித்துக் கொள்ளவில்லை. அவர்கள் பிரசங்கித்து, விசுவாசித்தவர்களை ஞானஸ்நானப்படுத்தி, சபைகளை நாட்டி, மற்றும் ஒவ்வொரு சபையிலும் அவர்களுக்காக மூப்பர்களை நியமித்த பொழுதுதான் அவர்கள் ஊழியம் நிறைவடைந்தது (அப். 14:23, 26ஐக் காணவும்). சுவிசேஷகர்கள் பெரும்பாலும் சென்று பிரசங்கிப்பதுடன் நிறைவடைந்தவர்களாய் உள்ளனர். இவ்விதமாகவே அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, மற்றும் இவ்விதமாகவே அவர்கள் ஊழியம் செய்துள்ளனர். இதன் விளைவாக, உலகெங்கிலும் சபைக்கு சபை கர்த்தருடைய ஊழியமானது நிறைவேற்றப்படாததாக விடப்பட்டுள்ளது (தீத்து 1:5ஐக் காணவும்).* [2]*விரும்புதல்* (Gk.: *orego*) *"... சிலவற்றைத் தொட அல்லது பற்றிக் கொள்ள ஒருவர் தம்மை நெருக்கி நீட்டுதல்"* (C.G. Wilke and Wilibald Grimm, *A Greek - English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids. Mich.: Baker Book House, 1977], 452). [3]*"கண்காணி" என்பதற்கான வார்த்தையான episkopos என்பது "ஒரு கண்காணி, மற்றவர்களால் செய்யப்படும் பணியானது சரியாகச் செய்யப்படுகிறதா என்று கண்காணிக்கும் கடமையைக் கட்டளையாகப் பெற்ற ஒரு மனிதர், பொறுப்பாளர், பாதுகாவலர், அல்லது மேற்பார்வையாளர்" என்று விளக்கப்படுகிறது* (Thayer, 243). [4]*விருப்பம்* (Gk.: *epithumeo*) - *"... ஒருவர் தம் இதயத்தை ஒன்றின் மீது வைத்தல், விரும்புதல், இச்சித்தல், பேராவல் கொள்ளுதல்"* (G. Abbott - Smith, *A Manual Greek Lexicon of the New Testament* [Edinburgh, Scotland: T. & T. Clark, 1948], 170). [5]*இருக்க வேண்டும்* (Gk.: *dei*, *நிகழ்கால உறுதி வினை, deo என்பதிலிருந்து வந்த படர்க்கை ஒருமைச் சொல்). உறுதி வினை இதனை கட்டாயமாக்குகிறது;* Deo *என்றால்,*

“கட்டுப்பட, பிணைக்க, ஒட்ட ... சட்டம், கடமை ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்க” என்று அர்த்தப்படுகிறது (Thayer, 131). [6]குற்றம் சாட்டப்படாதவர் (Gk.: *anepileptos*) - “... அச்சத்தை எதிர்நோக்கியிராத ... கண்டனத்திற்கு ஆளாகாத, குற்றம் சாட்டப்பட முடியாத” (Thayer, 44); “குற்றமற்ற, குற்றம் சாட்டப்பட முடியாத” (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 54). [7]மதுபானத்திற்கு அடிமையாகுதல் (Gk.: *me paroinos*) - “மதுபானத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தல், குடித்தல் ... மதுபானம் பண்ணி சண்டையிடுதல்; எனவே குடி போதை கலாட்டா, தவறான பயன்பாடு” (Thayer, 490); “மதுபானத்தினால் ... மதுபானத்தினால் அல்லது மதுபானத்தின் மீது நடக்கின்றவை, ... கட்டுக்கடங்காக் களியாட்டம் ... குடிகாரனின் பாடல்கள் ... மதுபானம் பண்ண நீண்ட நேரம் அமர்தல், மதுபானத்திற்கு அடிமையாகுதல்” (Robinson, 558). [8]J. W. McGarvey, *A Treatise on the Eldership* (N.p.: 1870; reprint, Murfreesboro. Tenn.: Dehoff Publication, 1950), 61. [9]அடித்தல்/அடிக்கிறவர் (Gk.: *plektes*) - “... காயப்படுத்துபவர், அடிக்கத் தயாராய் இருப்பவர்; ... விரோதம் பண்ணுகிற, சண்டை செய்கின்ற நபர்” (Thayer, 516-17); “... அடிக்க விரும்புபவர், சண்டையிடுபவர்” (Robinson, 589). [10]சண்டை பண்ணாதவர் (Gk.: *amachos*) - செயப்பாட்டு (வினை): “... சண்டை செய்யாதவர், வெற்றி கொள்ளப்பட முடியாதவர் ...”; செய் (வினை): “சண்டை செய்யாத ...”; வலிவார்ந்த (வினை): “விரோதம் கொள்ளாதவர், சண்டை யிடாதவர்” (Robinson, 36).

[11]*Webster’s Unabridged Dictionary*, 1983 ed., s.v. “contentious” (விரோதம் உள்ள தன்மை). [12]முதல் மூன்று சொற்றொடர்களின் ஒருமைத் தன்மையைக் கவனியுங்கள். இப்படிப்பட்ட நபர் ஒருவர் தவறான பயன்பாடு மற்றும் தூண்டுதல் ஆகிய வற்றுக்குச் சாய்வாரா? இப்படிப்பட்ட நபர் ஒருவர் அழுத்தங்களின் கீழ் நொறுங்கிப் போவாரா? [13]பண ஆசை இல்லாதவர் (Gk.: *aphilarguron*) - “பணத்தை விரும்பாதவர், பேராசையற்றவர்” (Thayer, 89); “பேராசையில்லாதவர்” (Robinson, 113). [14]நூதன சீஷன் (Gk.: *neophutos*) - “... புதிதாக நடப்பட்ட ... புதிய செடி ... பயின்று கொண்டிருப்பவர் ... சமீபத்தில் கிறிஸ்தவரான ஒருவர்” (Thayer, 424). [15]தன் இஷ்டம் (Gk.: *authades*) - “... தன்னைப் பிரியப்படுத்துதல், தன் இஷ்டப்படி செய்தல், முரட்டு குணம்” (Thayer, 83); “... தன்னில் நிறைவடைகிற; ... முரட்டு சுபாவம் கொண்ட” (Robinson, 106). [16]முற்கோபம் (Gk.: *orgilos*) - “கோபத்திற்குச் சாய்கிற, விரைவில் கோபம் கொள்ளுகிற” (Walter Bauer, *A Greek - English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 583); “... கோபம் கொள்ள ஏதுவான, எளிதாகக் கோபம் கொள்ளுகிற” (Thayer, 452). [17]ஒரே மனைவியை உடைய புருஷன் (Gk.: *mias gunaikos andra*) - நேரடியான பொருளில் “ஒரு பெண்ணுக்கு மனிதர்.” [18]J. W. McGarvey, “Church Government,” *The Missouri Christian Lectures, 1889-91* (St. Louis: Christian Publishing Co., 1892), 191. [19]இந்த விஷயங்களின் மீதான முடிவுகள் சீர்த்தன்மை உடையவைகளாய் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, மூப்பர் ஒருவரின் மனைவி இறந்து போனால் என்ன செய்வது? அவர் பதவி விலக வேண்டுமா? அவர் எதிலாவது தகுதி குறைந்து விடுகிறாரா? அவர் தம் ஊழியத்தில் (சிறப்பாக ஆலோசனை அளிக்கும் சூழ்நிலைகளில்) தடைப்படுத்தப்படுவாரா? மற்ற விஷயங்களில் தகுதி பெற்று ஆனால் தம் மனைவி இறந்துள்ள நிலையில், அவர் நியமிக்கப்பட முடியுமா? மூப்பர் ஒருவரின் மனைவி இன்னும் உயிருடன் இருக்க, விசுவாசத்தில் உள்ள (அவருடைய) இரு பிள்ளைகளும் கொல்லப்பட்டால் என்னவாகும்? இனிமேல் அவர் தகுதியுள்ளவராய் இருப்பதில்லையா? அவரது மனைவி இறந்து, மற்றும் அவர் பதவி விலக வேண்டும் என்று சபை

நம்புகிறதென்றால், ஊழியம் செய்யத் தொடரு வதற்கான தமது உரிமையை அவர் வலியுறுத்துவது அவருக்கு ஞானமுள்ளதாயிருக்குமா? [20]ஜாக்கிரதை (Gk.: *nephalios*) - "... தெளிவான ... மதுபானத்தை விலக்கி வைக்கிற, முற்றிலுமாகவோ ... அல்லது குறைந்தபட்சம் அதன் மட்டுமிஞ்சிய பயன்பாட்டில் இருந்தோ விலகியிருத்தல் (Thayer, 425); "தெளிவான சிந்தையுள்ள, கவன நிறைவுள்ள, எச்சரிக்கையான" (Robinson, 480).

[21]தெளிந்த புத்தி (Gk.: *sophron*) - "... ஒருவரின் புலன்களில் ஆரோக்கியமான சிந்தையின், தெளிவான மனநிலை ... ஒருவரின் விருப்பங்கள் மற்றும் தூண்டுதல் களைக் கட்டுப்படுத்துதல், தன்னடக்கம், உணர்வுச் சமநிலை" (Thayer, 613); "ஒருவர் ஆரோக்கியமான காரணத்தைப் பின்பற்றுதலும் மற்றும் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்துதலும் பற்றியது ... உணர்வுக் கட்டுப்பாடு, தன்னடக்கம், அதாவது சிந்தை கொண்டிருத்தல், விருப்பங்களும், உணர்வுகளும் தன்னடக்கம் உடையவை களாகவும், நன்கு முறைப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல்" (Robinson, 707). [22]யோக்கியதை உள்ள தன்மை (Gk.: *kosmios*) - "... நன்கு ஒழுங்கமைந்த, தகுதி வாய்ந்த, தன்னடக்கமான, ஒழுக்க ரீதியில் அமைந்த" (Robinson, 409); "நன்கு அமைவு பெற்றதாக காணப்படுகிற ... நற்பண்புடன், நன்கு அமைவு பெற்ற வாழ்க்கை கொண்ட ஒரு மனிதர்" (Thayer, 356). [23]உபசரிப்புத் தன்மை (Gk.: *philoxenos*) - "... விருந்தினர்களிடம் பெருந்தன்மையுடைய, உபசரிப்புக்கு ஒப்புக் கொடுத்த" (Thayer, 654); "அந்நியர்களை நேசிக்கின்ற" (Robinson, 763). [24]Otto Foster, *Scriptural Government of the Church* (Delight, Ark.: Gospel Light Publishing Co., 1948), 16-17. [25]போதக சமர்த்தர் (Gk.: *didaktikos*) - "போதித்தலில் விருப்பமும் திறமையும் மிக்க ... ஒருவரைப் போதிக்கக் கூடியவராக்கும், எளிதில் பழகுபவராக்கும் தன்மையைத் தருகின்ற ஒழுக்க நெறி" (Thayer, 144). [26]McGarvey, "Church Government," 193. [27]சாந்த குணம் (பொறுமை) (Gk.: *epieikes*) - "சரியான, பொருத்தமான ... சமநிலையான, நியாயமான, மென்மையான, ..." (Thayer, 238). [28]குடும்பம் (Gk.: *oikou, oikos* என்பதன் ஆறாம் வேற்றுமை ஒருமைச் சொல்) - "ஒரு வீடு ... வாழும் இடம் எதுவும், ... ஒருவர் தமது தங்குமிடத்தை நிலை நிறுத்தியுள்ள இடம், ஒருவர் தங்க அமைவு பெற்ற இடம், வீட்டிற்குரிய ... ஒரு வீட்டில் உள்ளவர்கள், எல்லா நபர்களும் கூடிய ஒரு குடும்பம். ஒரு வீட்டார் ... ஒருவரின் சந்ததியார்" (Thayer, 441). [29]நடத்துதல் (Gk.: *proistamenon, proistemi* என்பதன் நிகழ்கால இடை எச்ச வினை) - "மேலாக இருத்தல், தலைமை தாங்கி நடத்துதல் ... எந்த விஷயம் குறித்தும் அக்கறை கொள்ளுதல், தளரா உழைப்புடன் இருத்தல், நடைமுறைப்படுத்துதல், பராமரித்தல்" (Robinson, 620); "பாதுகாப்பாளராக அல்லது காவலராக இருத்தல்; உதவி அளித்தல் ... அக்கறை கொள்ளுதல், கவனம் செலுத்துதல்" (Thayer, 539). [30]பணிவு (Gk.: *hupotage, hupotasso* என்பதன் 2 ஆரிஸ்ட் நிபந்தனை செயப்பாட்டு வினை) - இது செயப்பாட்டு வடிவில் உள்ளது என்ற உண்மையானது ஒருவர் தம் ஆளுகை மாதிரியினால் அந்த அளவு இயக்கப்படுதலுக்கு அனுமதிக்கிறது; எபே. 6:4; கொலோ. 3:21 ஆகியவற்றைக் கவனியுங்கள். இவ்வார்த்தையானது தன்னிலேயே, "ஏற்பாடு செய்தல் அல்லது கீழாக இடுதல் ... கீழ்ப்படிந்திருத்தல், கீழ்ப்படியச் செய்தல்; ... பணிவுடன் இருத்தல் ... கீழ்ப்படிதலுடன் இருத்தல்" என்று அர்த்தப்படுகிறது; (Robinson, 752); "ஒருவரின் கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிதல்; ஒருவரின் புத்திமதி அல்லது அறிவுரைக்கு இணங்குதல்" (Thayer, 645).

[31]நல்லொழுக்கம் (Gk.: *semnotes*) - "... நல்லொழுக்கம், மேன்மை, தூய்மை ... மதிப்பு, நேர்மை, தூய்மை" (Thayer, 573). [32]Thayer, 511. இச்சொற்றொடரானது கிறிஸ்துவுக்குள் வருவதற்கு சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த தனிநபர்கள் தொடர்பாகப் புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது (அப்.

*4:4; 15:9).* இப்படிப்பட்ட நம்பிக்கையானது ஞானஸ்நானத்திற்கும், அதன் பிறகு(ம்) கீழ்ப்படிதலுக்கும் வழிநடத்துகிறது *(அப். 2:37-42, 47; 5:14).* [33]துன்மார்க்கம் (Gk.: *asotia*) - "மட்டுமீறிய உடல் வேட்கை, கட்டுக்கடங்காக் களியாட்டம், கலகம்" (Robinson, 104); "... கை விடப்பட்ட மனிதனைப் பற்றியது, இரட்சிக்கப்பட முடியாத ஒருவர், ... திருத்தப்பட முடியாத தன்மை, ... கை விடப்பட்ட ஒழுக்கங் கெட்டவர், அவர் வாழ்வு; மட்டுமீறிய ஊதாரித்தனம், ஊதாரித்தனம்" (Thayer, 82). [34]அடங்காதவர் (Gk.: *anupotaktos*) - "... கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படுத்தப்பட முடியாத, கீழ்ப்படிதலற்ற, கட்டுக்கு அடங்காத, முரண்டு பிடிக்கின்ற தன்மை" (Thayer, 52). [35]டெய்ட்டன் கீஸீ அவர்களால் எழுதப்பட்ட *மூப்பர் தன்மை பற்றிய ஒரு மறு மதிப்பீடு* என்ற நூலில் இவ்வினாவைப் பற்றிய அதிகம் முழுமையான கலந்துரையாடல் உள்ளது (Abilene, Tex.: Quality Publications, 1967), 30-36. [36]நற்சாட்சி (Gk.: *marturia*) - "... ஒருவர் சான்றளிப்பது ... ஒழுக்க முறை சார்ந்த கருத்தில், ஒருவரின் பண்பு பற்றிய சாட்சியம்" (Thayer, 391). [37]Foster, 22. [38]நல்லோர் மேல் பிரியமுள்ளவர் (Gk.: *philagathon*) - "... நன்மையை நேசித்தல்" (Thayer, 653); "நன்மை, நேர்மையை நேசிப்பவர்'' (Robinson, 761). [39]நீதிமான் (Gk.: *dikaios*) - "... ஒவ்வொருவருக்கும் செலுத்த வேண்டியதைச் செலுத்துகிறவர் ... மற்றவர்கள் மீது நீதியான நியாயத் தீர்ப்பைச் செலுத்துகிறவர், இதை வார்த்தையினால் விளக்கவோ அல்லது அவர்களுடன் நடந்து கொள்ளும் வகையில் காண்பிக்கவோ செய்யலாம்" (Thayer, 149); "... கண்டிப்பான நீதியுடன் இருப்பவர் ... ஒருவர் இருக்க வேண்டிய சரியான வழியில் இருத்தல்" (Robinson, 185). [40]பரிசுத்தமான (Gk.: *hosios*) - "... பாவத்தினால் கறைபடாத, துன்மார்க்கம் நீங்கப் பெற்ற, மதரீதியாக ஒழுக்கக் கடமை ஒவ்வொன்றையும் கடைப்பிடிக்கின்ற, சுத்தமான, பரிசுத்தமான, பக்தியுள்ள" (Thayer, 456).

[41]இச்சையடக்கமுள்ளவர் (Gk.: *egkrates*) - "அடிமைப்படுத்துதல், கட்டுப் படுத்துதல், கடிவாளம் இடுதல், தடுத்து நிற்றல், ... ஒருவர் தம் சுயத்தை, உணர்வை, இச்சைகளைக் கட்டுப்படுத்துதல்" (Thayer, 167). [42]Foster, 26. [43]A.L. Deveny, *The Church and Its Elders* (Austin, Tex.: Press of Von Boeckmann - Jones Co., 1941), 48. [44]கீஸீ எழுதிய *மூப்பர் தன்மையின் ஒரு மறுமதிப்பீடு, 11-24*ல் மூப்பர்களின் பணி பற்றிய பிற தகவல் தரப்பட்டுள்ளது. [45]Ron D. Smotherman, "Deacons' Work as Reflected in the Early Church," *Christian Bible Teacher* (July, 1974): 284. [46]உதவிக்காரர்கள் (Gk.: *diakonoi*) - ஸ்மோத்தர் மேன் அவர்கள் *diakonia* என்ற வார்த்தையை ஊழியத்திற்கான மற்ற கிரேக்கச் சொற்றொடர்களிலிருந்து வேறுபடுத்தி அன்பின் நிமித்தம் செய்யப்படும் ஊழியம், சுயவிருப்பமான ஊழியம் என்று காண்பித்தார் (Smotherman, 284). [47]நல்லொழுக்கம் (Gk.: *semnos*) - "... பயபக்தியுள்ள, மாண்புமிக்க, வழிபடத்தக்க ... உயர்ந்த ஒழுக்கம் கொண்ட, தீவிரமான" (Abbott - Smith, 404); "பண்பிற்காக வழிபடத்தக்க, மதிக்கத்தக்க" (Thayer, 573); "மதிக்கத்தக்க, புகழ்ச்சிமிக்க ... நபர்களின் நல்லொழுக்கம், மேன்மைப்படுத்தத் தக்க" (Robinson, 659). [48]இரு நாக்குடைமை (Gk.: *dilogos* என்பதிலிருந்து வந்த *me dilogous)* - "... ஒரே விஷயத்தை இரு முறை கூறுதல், மறுபடியும் கூறுதல் ... பேச்சில் இரு தன்மை, ஒரு நபரிடத்தில் ஒரு விஷயத்தையும் இன்னொருவரிடத்தில் வேறோரு விஷயத்தையும் (வஞ்சிக்கும் நோக்கத்துடன் கூறுதல்)" (Thayer, 152); "... ஒரு விஷயத்தைப் பேசுதல் மற்றும் இன்னொன்றை அர்த்தப்படுத்துதல்" (Robinson, 186). [49]மதுபானப் பிரியராயிராமை (Gk.: *me oino pollo prosechontas*) - நேரடியான பொருளில், "ஒருவர் அதிகமான மதுபானத்திற்குத் தம்மை ஒப்புவியாமை [அல்லது இணைந்திராமை]" என்றாகிறது. இது செய்கைக்கு அப்பால், செய்கைக்குப் பின்னால் உள்ள சிந்தனைக்குச் செல்லலாம், ஏனென்றால், கிரேக்க வார்த்தையான *prosecho* என்பது "ஒருவரின்

சிந்தையைத் திருப்புதல்" என்ற கருத்தையும் கொண்டுள்ளது (Abbott - Smith, 385). [50]இழிவான ஆதாயம் (Gk.: *me aischrokerdeis*) - "தகுதியற்ற ஆதாயத்தின் மீது ஆவல்" (Robinson, 18-19); "இழிவான ஆதாயத்தின் மேல் ஆவல், முறையற்ற வழியில் வரும் இழிவான ஆதாயத்தின் மேல் பேராவல்" (Thayer, 17).

[51]இரகசியம் (Gk.: *musterion*) - "... சுவிசேஷத்தின் இரகசியம், கிறிஸ்தவ யுகம் என்பது நீண்ட காலமாக மறைத்து வைக்கப்பட்டு பிற்காலங்களில் முதலில் வெளிப்படுத்தப்பட்டது" (Robinson, 473-74); "... கிறிஸ்துவின் மூலம் மனிதருக்கு இரட்சிப்பை அருளுவதற்கான தேவனுடைய திட்டம் ஒரு காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது, ஆனால் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது" (Thayer, 420). [52]மனச்சாட்சி (Gk.: *suneidesis*) - "ஒழுக்க ரீதியாக நல்லது எது கெட்டது எது என்று பிரித்துப் பார்க்கும் வகையில், முன்னதைச் செய்யும்படியும் பின்னதை விலக்கும்படியும் தூண்டுகின்ற, ஒன்றைப் பாராட்டுகின்ற, மற்றதைக் கண்டனம் பண்ணுகிற ஆத்துமா; ..." (Thayer, 602). [53]A.T. Robertson, *Word Pictures of the New Testament*, vol. 4 (New York: Harper & Brothers, 1932), 574. [54]குற்றம் சாட்டப்படாதவர் (Gk.: *anegkletos*) - "... கணக்கு ஒப்புவிக்கும்படி அழைக்கப்பட முடியாத, கடிந்து கொள்ளப்படாத, குற்றம் சாட்டப்படாத, குற்றம் இல்லாத'' (Thayer, 44). [55]சோதிக்கப்படுதல் (Gk.: *dokimazesthosan*, நிகழ்கால கட்டளை, செயப்பாட்டு, *dokimazo* என்பதன் படர்க்கைப் பன்மை) - இது ஒரு கட்டளைச் சொல்லாக உள்ளது என்ற உண்மையானது, ''சோதித்தல்'' என்பது தெளிவான அக்கறையுடன் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. *Dokimazo* என்பது, "சோதிக்க ... பரிசோதனை செய்ய ... அக்கினி போன்று ... அதைக் கொண்டு நியாயந்தீர்க்க, வித்தியாசப்படுத்த, அங்கிகரிக்க, தகுதியானதென்று நியாயந்தீர்க்க'' என்று அர்த்தப்படுகிறது (Robinson, 188). [56]நடத்துதல் (Gk.: *proistemi*) - "மேலாயிருத்தல், தலைமை தாங்குதல் ... எந்த ஒரு விஷயத்திற்காகவும் அக்கறை கொள்ளுதல், கவனமாய் இருத்தல், நடைமுறைப் படுத்துதல், பராமரித்தல்" (Robinson, 620); "பாதுகாப்பாளராக அல்லது காவலராக இருத்தல்; உதவி அளித்தல் ... அக்கறை கொள்ளுதல், கவனம் அளித்தல்" (Thayer, 539). [57]நன்றாய் (Gk.: *kalos*) - "... அழகு நிறைந்த ... மேன்மையான, சரியான, குற்றத்திற்கு இடமற்ற வகையில் உள்ள ... மதிக்கத்தக்க, மதிப்பில் உள்ள'' (Thayer, 323). [58]பெண்கள் (Gk.: *gunaikas, gune* என்பதில் இருந்து வந்த ஆறாம் வேற்றுமை பன்மைச் சொல்) - "... எந்த வயதும் உடைய ஒரு பெண், கன்னிப் பெண் அல்லது திருமணமானவள் அல்லது விதவை. ... ஒரு மனைவி [*1 கொரி. 7:3, 10, 13*ஐக் காணவும்] ... நிச்சயிக்கப்பட்ட ஒரு பெண் [*மத். 1:20, 24*ஐக் காணவும்]" (Thayer, 123). [59]அவதூறுகள் (Gk.: *me diabolous*) - "... இழிவாய்ப் பேசத் தூண்டப்படுதல் ... பொய்யாகக் குற்றம் சாட்டுதல்" (Thayer, 135); "பழி தூற்றுபவர், குற்றம் சாட்டுபவர், இழித்துரைப்பவர்" (Robinson, 168). [60]Robertson, 575.

[61]தெளிந்த புத்தி (Gk.: *nephalios; Abbott-Smith*) - ''... தெளிவான ... மதுபானத்திலிருந்து முழுமையாகவோ ... அல்லது குறைந்தபட்சம் அதன் அளவுக்கதிகமான பயன்பாட்டிலிருந்தாவதோ விலகியிருத்தல்'' (Thayer, 425); "... தெளிவான சிந்தையுள்ள, கவனம் நிறைந்த, சூழ்நிலைகளை உணர்ந்துள்ள" (Robinson, 480). [62]James Burton Coffman, *1 & 2 Thessalonians, 1 & 2 Timothy, Titus & Philemon* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1978), 182-84. [63]A.C. Hervey, "1 Timothy," in *The Pulpit Commentary*, ed. H.D.M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 21:53. [64]Smotherman, 284-85. [65]நடக்கை (Gk.: *anastrepho*) - "... மாற்றியமைக்க, திருப்பிப் போடுதல் ... நடத்தை ..., குறிப்பிட்ட கொள்கைகளின் நடைமுறைப்படுத்துதல் என்பதன்

கருத்தில் ... தேவனுடைய வீட்டாரிடத்தில் ஒருவர் பலத்துடனும் தைரியத்து டனும் நடந்து கொள்ளுதல் ..., 1 தீமோ. 3:15 ... சுத்த மனதுடன் பரிசுத்தத்தில் வாழுதல் ...” (Arndt and Gingrich, 60-61). [66]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 102-3. [67]பொதுவான அறிக்கை (Gk.: *omologoumenos*) - “... எல்லாருடைய ஒப்புதலினால் அறிக்கையிடுதல், முரண்பாடின்றி இருத்தல்” (Thayer, 446). [68]மாபெரியது (Gk.: *megas*) - “... பெரிய ... ஏராளமான ... உணர்வுகளைப் பலமாகப் பாதிக்கும் இயற்கை நிகழ்வுகள் ... பாராட்டுதலையும் வியப்பையும் எழுச்சியூட்டும் பார்வைக்குரிய பொருட்கள் ... திறமை, ஒழுக்க நெறி, அதிகாரம், வல்லமை ஆகியவற்றில் வல்லவர்களாய் உள்ள நபர்களுக்குரிய வகையில் ... மேசியாவான இயேசுவின் மாண்பு மிக்க மனித நபர்த்துவம், ... மற்றும் அவரது திரு அவதாரத்திற்கு முந்திய செல்வாக்கு ... விஷயங்கள் அவற்றின் முக்கியத்துவத் திற்காக உயர்வாக மதிக்கப்படுதல் ... ஒரு மாபெரும் அளவீட்டைத் தயாரித்தல்” (Thayer, 594-95). [69]கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டது பற்றியும் மற்றும் ஆவியானவரால் மெய்ப்பிக்கப்பட்டது பற்றியும் வில்லியம் ஹென்டிரிக்ஸென் அவர்கள், “ ‘மாம்சம்’ மற்றும் ‘ஆவி’ என்பவற்றின் கலவை/இணைவு வேத வசனத்தின் உத்தரவாதத்தைக் கொண்டுள்ளது. குறிப்பு: ‘வார்த்தை மாம்சமானார் மற்றும் நம்மிடையே ஒரு கூடாரத்தில் குடியிருந்தார். நாம் அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவானவருடைய ஒரே பேறான குமாரனுக்கேற்ற மகிமையாகவே இருந்தது, அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருந்தார். ... மற்றும் யோவான், ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர் மேல் தங்கினதைக் கண்டேன் என்று சாட்சியளித்தார் (யோவா. 1:14, 32; இ.வ. 3:34). ஆவியானவரால் இவ்விதமாக அபிஷேகம் பெற்ற (சங். 2:2; 45:7; மத். 3:16; மாற். 1:10; லூக். 3:22; அப். 4:27; 10:38) இவர் ‘மாம்சத்தில்’ (மனிதரின் பலவீனமான இயல்பில்) இருக்கையில் அற்புதங்கள் நிகழ்த்தவும், அசுத்த ஆவிகளைத் துரத்தவும் வல்லவராய் இருந்தார் (மத். 12:28). வல்லமையின் ஒவ்வொரு செயலின் வழியாகவும் அவரது நீதி நிலைநாட்டப்பட்டது; ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் இந்த வல்லமையைப் பாவி ஒருவருக்குக் கொடுக்க மாட்டார் என்பது உறுதி (யோவா. 9:31). ஆனால் விசேஷமாக, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்பதன் வழிமுறையினால் இயேசு தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற அவர் தம் உரிமைகோருதலை ஆவியானவர் முழுமையாக மெய்ப்பித்தார் (ரோமர் 1:4)” என்றுரைத்தார் (William Hendriksen, *A Commentary on 1 and 2 Timothy and Titus* [London: The Banner of Truth Trust, 1964], 140). [70]Alexander Campbell, “Justification and Coronation of the Messiah,” *A Collection of Original Sermons* (Louisville, Ky.: Morton & Griswold, 1851), 438.